விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Sri Lanka


# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 23
ஒலி 190 வள்ளுவர் ஆண்டு 2053 ஆனி 13 திங்கட்கிழமை (27.06.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை
T.P: 021 720 1005
இல:144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=
மட்டும்

## மீண்டும் எகிறியது எரிபொருள் விலை



(கொழும்பு)
இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 2.00 மணி முதல் அமுலுக்கு வரும் வகையில் எரி 15

## மாதாந்தம் 800 மில்.டொலர் இலங்கைக்கு வழங்க தயார்

### நிபந்தனைகளுடன் அறிவித்தது சுவிஸ் புலம்பெயர் அமைப்பு

(கொழும்பு)
இலங்கைக்குத் தேவையான மாதாந்தம் 800 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்கத் தயார் என இலங்கை தேசப்பற்றுள்ள புலம்பெயர் அமைப்பு தெரிவித்துள்ளது.
பொருளாதார நெருக்கடியிலிருந்து 15

### உணவு பொருட்களின் விலை அதிகரிப்பு

(கொழும்பு)
உணவுப் பொதிகள் மற்றும் ஏனைய 15

### ரயில் கட்டணங்கள் எகிற வாய்ப்பு

(கொழும்பு)
ரயில் கட்டணங்களை 50 சதவீதமாக அதிகரிக்குமாறு அமைச் 15


### பேருந்து கட்டணங்கள் உயர்ந்தன

(கொழும்பு)
இன்று முதல் பேருந்து கட்ட 04

### கடன் வழங்குவதற்கு கைமாறாக

# இந்தியத் திட்டங்களை துரிதப்படுத்துங்கள்

### ஜனாதிபதி கோட்டாவிடம் இந்திய உயர்மட்டக்குழு தெரிவிப்பு



*(கொழும்பு)*
இலங்கைக்கு கடன் வழங்குவதற்கு பதில் இந்தியாவுடன் இணக்கம் காணப்பட்ட திட்டங்களைத் துரிதப்படுத்துவதே சிறந்தது என இந்தியா தெரிவித்துள்ளது.
*(04ஆம் பக்கம் பார்க்க)*

### எரிபொருள் பெற
## இரு அமைச்சர்கள் ரஷ்யா பயணம்

(கொழும்பு)
எரிபொருள் கொள்வனவு தொடர்பில்கலந்துரையாடுவதற்காக 2 அமைச்சர்கள் இன்று ரஷ்யாவுக்கு பயணமாகவுள்ளதாக வலுசக்தி அமைச் 15

### தெல்லிப்பளை மருத்துவமனையின்
## மருந்துக் களஞ்சியத்தில் திடீர் தீ விபத்து!

### மருந்துப் பொருட்கள் தீக்கிரை

(யாழ்ப்பாணம்)
தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலையின் மருந்துக் களஞ்சியத்தில் ஏற்பட்ட திடீர் தீ விபத்துக் காரணமாகப் பெரும் சேதம் ஏற் 15

### இ.போ.ச ஊழியர்களின்
## பணிப் பகிஷ்கரிப்பு கைவிடப்பட்டது

(யாழ்ப்பாணம்)
பணிப் புறக்கணிப்புப் போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாக வடபிராந்திய இலங்கை போக்குவரத்து சபை ஊழியர்கள் அறிவித் 15

### 3ஆம் திகதிவரை 3 மணிநேர மின்வெட்டு

(கொழும்பு)
இன்று முதல் எதிர்வரும் 3ஆம் திகதி வரையான காலப்பகுதி 15



## அறிவித்தல்களை விடுப்பதற்கு அமைச்சர்கள் தேவைதானா?


### அநுரகுமார திஸாநாயக்க கேள்வி

(கொழும்பு)
எரிசக்தி அமைச்சர் இருக்கிறார், நாட்டில் எரிபொருள் இல்லை, விவசாயத்துறைக்கு அமைச்சர் இருந்தும், வயல்களுக்கு உரம் இல்லை என 04

### ஜுலை 1 வரை நகர பாடசாலைகளுக்கு விடுமுறை

(கொழும்பு)
கொழும்பு வலயத்திலுள்ள பாடசாலைகள் மற்றும் அனைத்து மாகாணங்களிலும் உள்ள நகர பாடசாலைகளை மூடு 04

## 7 ஆண்டுகளுக்கு நெருக்கடி நிலை தொடரும்



பொருளாதார வல்லுநர் எச்சரிக்கை
3ஆம் பக்கம் பார்க்க

## கொழும்பில் தொடரும் துப்பாக்கிச் சூடு

(கொழும்பு)
களனி - பட்டிய சந்தி பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் நபர் ஒருவர் உயிரிழந்துள்ளார் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.
சம்பவத்தில் 31 வயதான ஒருவரே 04

## எரிபொருள் பெற்றவர்கள் பணிக்குச் செல்லுங்கள்

### வடக்கு ஆளுநர் பணிப்பு



(யாழ்ப்பாணம்)
நாடளாவிய ரீதியில் எரிபொருளுக்கு கடும் தட்டுப்பாடு நிலவி 04

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 13 நீங்காத நினைவலைகளில் ஆண்டுகள்...



அமரர்

# சுப்பிரமணியம் நாகராஜா

(Retired MSO - Jaffna Post Office)

திதி :- சதுர்த்தசி 27.06.2022 திங்கட்கிழமை

மலர்வு
18.07.1930

உதிர்வு
22.06.2009

அப்பா உங்கள்

ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

எங்கள் குடும்பத்தின் குலவிளக்காக நம் குடும்பத்தின் வளர்ச்சிக்காக அயராது உழைத்து அனைவரது வாழ்வினையும் பிரகாசிக்கச்செய்த அமரர் சுப்பிரமணியம் நாகராஜா அவர்களது ஆத்ம சாந்திக்காக 27.06.2022 திங்கட்கிழமை அன்று கைதடி வீரகத்திப் பிள்ளையார் சிவன் ஆலயத்தில் விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெற்று தொல்புரம் சிவபூமி முதியோர் இல்லம், கோண்டாவில் சிவபூமி மனவிருத்திப் பாடசாலை, சுன்னாகம் வாழ்வக விழிப்புல வலுவிழந்தோர் இல்லம், வவுனியா ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி அருளக முதியோர் இல்லம், புதுக்குடியிருப்பு இனிய வாழ்வு இல்லம் ஆகிய பராமரிப்பு நிலையங்களிலுள்ள சிறுவர்கள், முதியோர்களுக்கு விசேட உணவு உபசாரமும், 30.06.2022 வியாழக் கிழமை அன்று நாவற்குழி சிவதெட்சணாமூர்த்தி திருக்கோவில் திருவாசக மண்டபத்திலும், 03.07.2022 ஞாயிற்றுக் கிழமை அன்று கீரிமலை சிவபூமி மடத்திலும் அன்னதானம் வழங்கப்படும்.

தகவல்:- குடும்பத்தினர் சார்பாக
மகன் நாகராஜா விஜயகுமார் (சங்கர்) சுவிஸ்.

(11869)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிதி அமைச்சு பதவியில் மாற்றம்?

(கொழும்பு)

இராஜாங்க அமைச்சர்கள் நியமனம் மிக விரைவில் இடம்பெறவுள்ளது என அரசியல் வட்டாரங்களில் இருந்து அறிய முடிகின்றது.

சர்வகட்சி அரசில் அமைச்சரவை நியமிக்கப்பட்டிருந்தாலும், இன்னும் இராஜாங்க அமைச்சர்கள் நியமிக்கப்படவில்லை. இந்நிலையிலேயே விரைவில் இராஜாங்க அமைச்சர்கள் நியமிக்கப்படுவர்கள் எனத் தெரிய வருகின்றது.

அதேவேளை, நிதி அமைச்சர் பதவியில் மாற்றம் வரலாம் எனவும் தெரிய வருகின்றது.

பிரதமரிடமிருந்து நிதி அமைச்சு பறிக்கப்படலாம் என அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகின்றது. (4)

# பொருளாதார நெருக்கடி 7 ஆண்டுகளுக்கு தொடரும்

## பொருளாதார வல்லுநர் எச்சரிக்கை

**(கொழும்பு)**

**நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி இன்னும் 7 வருடங்களுக்கு தொடரலாம் என பொருளாதார வல்லுநர் பிரியநாத் ஜயசூரிய தெரிவித்துள்ளார்.**



அதுவரை சர்வதேச கடன்களை இலங்கை செலுத்த வேண்டியிருக்கும் எனவும் தெரிவித்தார். தொலைக்காட்சி நிகழ்ச்சியில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுக்கும் வகையில் அனைவரும் தமது பழக்கவழக்கங்களை மாற்றிக்கொள்ள வேண்டுமென பிரியநாத் ஜயசூரிய சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, ஜூலை 25 ஆம் திகதி ஒரு பில்லியன் டொலர் கடன் பத்திரத்தை செலுத்தத் தவறியதற்காக இலங்கைக்கு எதிராக அண்மையில் ஒருவர் நியூயோர்க் பெடரல் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்திருந்தார்.

இந்த வழக்கை ஹாமில்டன் ரிசர்வ் வங்கி தாக்கல் செய்தது. அந்த நபரின் நிறுவனம் இலங்கையில் 250 மில்லியன் அமெரிக்க டொலருக்கும் அதிகமான சர்வதேச இறையாண்மை பத்திரங்களை வைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அதற்கமைய, பத்திரத்தின் வட்டி உட்பட முழுத் தொகையையும் உடனடியாக வழங்கக் கோரி நியூயோர்க் பெடரல் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளார்.

ஒரு இறையாண்மை பத்திரத்தை செலுத்தத் தவறியதை ஒரு நாடு என்ற முறையில் மிகவும் தீவிரமாக எடுத்துக் கொள்ள வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார். (4)

## துப்பாக்கிச் சூடு ஒருவர் பலி

(கொழும்பு)

மித்தெனிய பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் நபரொருவர் உயிரிழந்தார்.

அறிக்கை ஒன்றை வெளியிட்டு பொலிஸ் ஊடகப்பிரிவு இதனைத் தெரிவித்துள்ளது. (4)

## ஜூலை மாதம் 120,000 சிலிண்டர்கள் விநியோகம்

(கொழும்பு)

அடுத்த மாதம் 6 ஆம் திகதிக்கு பின்னர் 120,000 எரிவாயு சிலிண்டர்களை சந்தைக்கு வெளியிட எதிர்பார்ப்பதாக லிட்ரோ நிறுவனம் தெரிவித்துள்ளது.

அதன்படி நாளொன்றுக்கு 12.5 கிலோகிராம் எடையுள்ள 80,000 உள்நாட்டு எரிவாயு சிலிண்டர்களை விநியோகிக்க திட்டமிட்டுள்ளதாக அந்நிறுவனத்தின் தலைவர் தெரிவித்துள்ளார்.

அத்தோடு ஒரு நாளைக்கு 40,000 சிறிய எரிவாயு சிலிண்டர்களை அறிமுகப்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளதாக அவர் மேலும் கூறியுள்ளார். (4)

## சு.க.விலிருந்து இருவர் பல்டி

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் இருவர் விரைவில் ஐக்கிய தேசியக் கட்சியில் இணையவுள்ளனர்.

இதற்கான பேச்சுகள் வெற்றியளித்துள்ளது எனவும், விரைவில் தாவல் இடம்பெறவுள்ளது எனவும் உள்ளகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சுதந்திரக் கட்சியின் செயற்பாடுகள் மீது ஏற்பட்டுள்ள அதிருப்தி காரணமாகவே, இவர்கள் இந்த முடிவை எடுத்துள்ளனர். (4)

# மருத்துவர்கள் வரிசையில் நிற்பதால் சத்திர சிகிச்சைகள் ரத்து!

(கொழும்பு)

எரிபொருள் பற்றாக்குறையால் சுகாதாரத்துறை கடும் நெருக்கடி நிலையை எதிர்நோக்கியுள்ளது. எரிபொருளை பெற்றுக்கொள்ள சுகாதாரத் துறையினர் எரிபொருள் வரிசைகளில் காத்திருப்பதால் மருத்துவமனைகளில் சத்திர சிகிச்சைகளை மேற்கொள்ள முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளதாக இலங்கை மருத்துவர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

சங்கத்தின் உப தலைவர் விசேட மருத்துவர் சித்ரான் ஹதுருசிங்க இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

மருத்துவர்களால் அறுவை சிகிச்சைகளை மேற்கொள்ள முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

மேலும் இருதய சத்திர சிகிச்சைகளை மேற்கொள்ளும் மருத்துவர்கள் தமது சேவைகளை முன்னெடுத்துச் செல்ல முடியாத நிலை காணப்படுகிறது.

மகப்பேற்று அறுவை சிகிச்சை மேற்கொள்ளும் மருத்துவர்களும் சிகிச்சைகளை இரத்து செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

எரிபொருளை பெற்றுக்கொள்ள நீண்ட வரிசையில் காத்திருக்கின்றமையால் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது.

எளிமையாக மேற்கொள்ளப்பட்ட அறுவை சிகிச்சைகள் இன்று சிக்கலானவையாக மாற்றமடைந்துள்ளன. இதற்கான பொறுப்பினை அரசாங்கமே ஏற்க வேண்டும் எனத் தெரிவித்தார். (4)

## வரிசையில் நிற்போருக்கான மருத்துவ ஆலோசனைகள்

(கொழும்பு)

நாட்டில் அனைத்துப் பகுதிகளிலும் தற்பொழுது எரிபொருள் பெற்றுக்கொள்வதற்காக மக்கள் வரிசையில் காத்திருக்கின்றனர்.

இவ்வாறான ஒரு பின்னணியில் எரிபொருள் வரிசையில் காத்திருப்போருக்கு அவசர மருத்துவ ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

"எரிபொருள் வரிசையில் மணிக்கணக்காக காத்திருப்போர் குறைந்தபட்சம் இரண்டு லீற்றர் நீர் அருந்த வேண்டும்" என்று பொரளை மருத்துவ ஆய்வு நிறுவனத்தின் போசாக்கு நிபுணர் மருத்துவர் ரேணுகா ஜயதிஸ்ஸ அறிவுறுத்தல் வழங்கியுள்ளார்.

"உயர் குருதியமுத்தம், இருதய நோய்களினால் பாதிக்கப்பட்டுள்ளவர்கள் தங்களது மருந்து மாத்திரைகளையும் தம் வசம் வைத்திருக்க வேண்டும்.

வாகனங்களின் உள்ளே நீண்ட நேரம் காத்திருப்பதனை தவிர்த்து முடிந்தளவு வெளியில் இருங்கள்" என அவர் மக்களுக்கு அறிவுறுத்தியுள்ளார். (4)

## சந்திரிகா தலைமையில் புதிய அரசியல் கூட்டணி

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தலைமையில் புதிய அரசியல் கூட்டணியை ஆரம்பிப்பது தொடர்பாக திரைமறைவில் அரசியல் பேச்சுகள் ஆரம்பமாகியுள்ளன.

எனினும் இந்தக் கூட்டணியில் சந்திரிகா உத்தியோகபூர்வமான தலைமைப் பொறுப்பை வகிக்க மாட்டார் எனவும் தலைமைத்துவச் சபை கூட்டணியை வழிநடத்தும் எனவும் தெரியவருகின்றது.

இந்தக் கூட்டணியில் இணையுமாறு பலருக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது எனவும் கூறப்படுகின்றது. (4)

## அமெ.உயர்மட்ட குழு நாட்டை வந்தடைந்தது

(கொழும்பு)

அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் மற்றும் திறைசேரி திணைக்களத்தின் நான்கு உறுப்பினர்களைக் கொண்ட உயர்மட்டக் குழு நேற்று இலங்கையை வந்தடைந்தது.

இலங்கையின் பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு எத்தகைய உதவிகளை வழங்கமுடியும் என்பது குறித்து அவர்கள் பல தரப்பினருடனும் கலந்துரையாடல்களை முன்னெடுக்கவுள்ளனர்.

இந்தக்குழுவினர் நாளை மறுதினம் புதன்கிழமை வரை இலங்கையில் தங்கியிருந்து அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், பொருளியலாளர்கள் உள்ளிட்ட பிரதிநிதிகளை சந்திக்கவுள்ளனர்.

இந்த விஜயமானது இலங்கை மக்களின் பாதுகாப்பு மற்றும் சுபீட்சம் ஆகியன தொடர்பாக அமெரிக்கா கொண்டிருக்கும் கடப்பாட்டை வலியுறுத்தும் வகையில் அமைந்திருப்பதாக இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் கூறியுள்ளார்.

அமெரிக்கா கடந்த இரு வாரங்களில் இலங்கையிலுள்ள சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வணிகங்களுக்கென 120 மில்லியன் டொலர்களை வழங்குவதாக அறிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேருந்து...

ணத்தை 35% ஆகவும் குறைந்தபட்ச கட்டணத்தை 40 ரூபாயாகவும் அதிகரிக்க தனியார் பேருந்து உரிமையாளர்கள் தீர்மானித்துள்ளனர்.

எரிபொருள் விலை அதிகரிப்பு மற்றும் ஜூலை 1ஆம் திகதி வருடாந்த கட்டணத் திருத்தம் என்பனவற்றை கருத்திற்கொண்டு இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. (4-7)

## ஜூலை 1 வரை...

வதற்கு தீர்மானித்துள்ளதாக கல்வி யமைச்சு அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அந்த வகையில் குறித்த பாடசாலைகள் இன்று 27ஆம் திகதி முதல் ஜூலை மாதம் முதலாம் திகதி வரை மூடப்படவுள்ளதாக குறித்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்தோடு ஏனைய கிராமப்புற பாடசாலைகள் வழமைபோன்று செவ்வாய்க்கிழமை, புதன்கிழமை மற்றும் வியாழக்கிழமைகளில் இயங்கும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

எரிபொருள் நெருக்கடியை கருத்தில் கொண்டே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-7)

## எரிபொருள்...

வருகின்றது.

இவ்வாறான நிலையில் வடக்கில் தமது கடமைகள் நிமிர்த்தம் எரிபொருளைப் பெற்ற அரசு துறை சார்ந்த உத்தியோகத்தர்கள் தமது கடமைகளை உரிய முறையில் நிறைவேற்ற செல்ல வேண்டும் என வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா கோரிக்கை விடுத்தார்.

அதேவேளை இலங்கை போக்குவரத்துச் சபையின் வடமாகாண சாரதி காப்பாளர்கள் தாம் கடமைக்கு செல்வதற்குரிய எரிபொருளை உரிய தரப்பினர் தமக்கு பெற்றுத் தரவில்லை என நடத்திய ஊடகச் சந்திப்பை அடுத்து ஆளுநர் இவ்வாறு அறிவுறுத்தல் வழங்கியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அத்தியாவசிய சேவையில் ஈடுபடுபவர்கள் தொடர்பில் கரிசனையாக உள்ளதோடு அவர்களுக்கான எரிபொருளை தடையின்றி வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

மேலும் தமது கடமைகளை காரணங்காட்டி எரிபொருளை பெற்றவர்கள் தமது கடமைகளை உரிய முறையில் மேற்கொள்ள வேண்டுமென ஆளுநர் மேலும் தெரிவித்தார். (4-7,104)

## அறிவித்தல்களை...

ஜே.வி.பியின் தலைவர் அநுர குமார திஸாநாயக்க தெரிவித்தார்.

'வீதிக்கு இறங்குவோம், அரசை விரட்டியடிப்போம்' என்ற தொனிப் பொருளின் கீழ் அநுராதபுரத்தில் நேற்று நடைபெற்ற ஆர்ப்பாட்ட பேரணியில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரச நிர்வாகத்துக்கும் ஓர் அமைச்சர். ஆனால் அரச நிறுவனங்களுக்கு பூட்டு. பாடசாலைகள் எப்போது மூடப்படும் என்பதை அறிவிக்க 'கல்வி அமைச்சர்' எதற்காக இப்படியான அமைச்சர்கள்? என கேள்வியெழுப்பியதுடன் எரிபொருள் வருமா? வராதா என்பதை அறிவிக்கவும், பாடசாலைகள் திறக்கப்படுமா மூடப்படுமா? என்பதை அறிவிக்கவும் அமைச்சர்கள் தேவைதானா? எனவும் கேள்வியெழுப்பினார்.

அத்துடன் இந்த அரசாங்கத்தால் நாட்டைக் கட்டியெழுப்ப முடியாது. அதேவேளை நாட்டு மக்களை வதைக்கும் இந்த அரசை விரட்டியடிப்போம். தேசிய மக்கள் சக்தியாக நாட்டை மீட்டெடுக்கவும் ஆட்சியை பொறுப்பேற்கவும் நாம் தயார் எனவும் தெரிவித்தார். (4-7)

## கொழும்பில்...

உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், சம்பவத்தில் காயமடைந்த பெண் ஒருவர் சிகிச்சைகளுக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (4-7)

## இந்தியத்...

கடந்த வியாழக்கிழமை இலங்கைக்கு விஜயத்தை மேற்கொண்ட இந்திய உயர்மட்டக் குழுவினர் இலங்கைக்கு மேலும் கடனுதவிகளை வழங்குவதற்கு பதில் இந்தியா முன்னெடுக்கும் திட்டங்களை நிறைவேற்றுவதை துரிதப்படுத்த வேண்டும் என தெரிவித்துள்ளனர்.

இந்திய வெளிவிவகார செயலாளர் தலைமையிலான இந்திய உயர்மட்ட குழுவினர் ஜனாதிபதியையும் பிரதமரையும் சந்தித்து பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டுள்ளதுடன் இந்தியா தலைமையில் புதிய அபிவிருத்தி திட்டங்களை வலியுறுத்தியுள்ளனர்.

இந்தியாவில் அதானி குழுமத்துக்கு வழங்கப்படவுள்ள மன்னார் காற்றாலை மின் நிலையம், கொழும்புத் துறைமுக மேற்கு கொள்கலன் முனையம், சம்பூர் சூரிய மின் உற்பத்தி நிலையம், திருகோணமலை எண்ணெய் தாங்கி வளாக அபிவிருத்தித் திட்டம் ஆகியவை துரிதப்படுத்தப்பட வேண்டும் என இந்தியா அறிவித்துள்ளது.

எரிபொருளிற்காக இந்தியாவிடமிருந்து மேலும் கடன்கள் கிடைப்பதற்கான வாய்ப்புகள் இல்லை என தெரிவித்துள்ள தகவலறிந்த வட்டாரங்கள் ஒரு பில்லியன் டொலர் நாணய மாற்றிற்கான சாத்தியக்கூறுகளும் உள்ளன எனக் குறிப்பிட்டுள்ளன. (4-7)

# இலங்கை பெண்கள் அணியை வீழ்த்தி

# தொடரை வென்றது இந்தியா

இந்திய-இலங்கை பெண்கள் அணிக்கான 2ஆவது இருபது-20 போட்டி நேற்று முன்தினம் நடை பெற்றது.

இதில் டாஸ் வென்ற இலங்கை அணி பட்டிங்கை தேர்வு செய்தது. அதன்படி இலங்கை அணி களமிறங்கி ஆடியது. 20 ஓவர் முடிவில் இலங்கை அணி 7 விக்கெட் இழப்பிற்கு 125 ரன்கள் எடுத்தது.

அதிகபட்சமாக விஷ்மி குணரத்னே 45 ரன்கள் எடுத்தார். இதனையடுத்து 126 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் இந்திய அணி ஆடியது. ஸ்மிரிதி மந்தனா-ஷவாலி வர்மா ஜோடி களமிறங்கினர்.

அதிரடியாக விளையாடி ஷவாலி வர்மா 17 ரன்கள் எடுத்து வெளியேறினார்.



அடுத்து வந்த மேகனா 17 ரன்கள் எடுத்து ஸ்டெம் பிங் முறையில் அவுட் ஆனார்.

இதனையடுத்து மந்தனா-கவூர் ஜோடி நிதானமாக ஆடி ரன்களை சேர்த்தனர்.

34 பந்தில் 39 ரன்கள் எடுத்திருந்த நிலையில் ஸ்டெம்பிங் முறையில் மந்தனா விக்கெட்டை பறிகொடுத்தார்.

அடுத்த வந்த ஜெமிமா ரோட்ரிக்ஸ் 3, பாட்டியா 13 என வெளியேறினர். கடைசி வரை நிதானமாக விளையாடிய கவூர் அணியை வெற்றிப் பாதைக்கு அழைத்து சென்றார்.

19.1 ஓவரில் 127 ரன்கள் எடுத்து இந்திய அணி 5 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

கவூர் 31 ரன்கள் எடுத்து இந்த போட்டிக்கான சிறந்த வீராங்கனை விருதை தட்டிச் சென்றார்.

3 போட்டிகள் கொண்ட இருபது-20 தொடரை இந்திய அணி 2-0 என்ற கணக்கில் வென்றுள்ளது.

இரு அணிகளுக்கும் இடையேயான 3 ஆவது மற்றும் கடைசி இருபது-20 போட்டி இன்று நடைபெற வுள்ளது. (4)

# மரண அறிவித்தல்

பிறப்பு 18 - 10 - 1944



இறப்பு 26 - 06 - 2022

## செல்வி விசாகரத்தினம் சின்னத்துரை

( ஓய்வுநிலை உதவி திட்டமிடல் பணிப்பாளர் )

யாழ்ப்பாணம் வடமராட்சி ஊரிக்காடு நாவலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி விசாகரத்தினம் சின்னத்துரை அவர்கள் நேற்று (26.06.2022) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - இராசமணி தம்பதியரின் அன்புப் புதல்வியும் காலஞ்சென்ற துரைராசா, காலஞ்சென்ற கமலாதேவி, உத்தரராசா, காலஞ்சென்ற மல்லிகாதேவி, தியாகராஜா, ஸ்ரீஸ்கந்தராஜா ஆகியோரின் அன்புச் சகோதரியும் மகேஸ்வரராஜா, கனேசராஜா, காலஞ்சென்ற புவனேஸ்வரன், அழகேஸ்வரராஜா, விக்னேஸ்வரன், யசோதா, காலஞ்சென்ற நேசராஜா, அருச்சுனராஜா ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரியும் ரகுகுமார், ரமேஸ்குமார், தர்ஷிகா, நிஷாந்தி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (27.06.2022) திங்கட்கிழமை அன்னாரின் ஊரிக்காடு இல்லத்தில் காலை 11.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் மயிலியதனை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(C-4544)

தகவல் :-
சி. உத்தரராசா (சகோதரன்) - 076 469 8643
சி. ஸ்ரீஸ்கந்தராஜா (சகோதரன்) - 077 744 0166

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உணவு, ஊட்டச்சத்து அவசர நிலைமை தொடர்பில்

# உலக உணவுத் திட்டம் நடவடிக்கை

(கொழும்பு)

**ஐக்கிய நாடுகள் சபையின் முன்னணி மனிதாபிமான நிறுவனமான உலக உணவுத் திட்டம் இலங்கையின் உணவு மற்றும் ஊட்டச்சத்து அவசர நிலைமை தொடர்பில் உடனடி நடவடிக்கை எடுத்துள்ளது.**

இதனடிப்படையில் 5 வயதுக்குட்பட்ட குழந்தைகள், கர்ப்பிணித் தாய்மார் மற்றும் பாலூட்டும் தாய்மாருக்கான திரிபோஷா மற்றும் பாடசாலை மாணவர்களுக்கான உணவுத் திட்டம் என்பவற்றை மீண்டும் செயற்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொண்டுள்ளது.

இலங்கையில் இவ்வாறான தேவையுள்ள 3 மில்லியன் பேருக்கு இத்திட்டத்தை டிசம்பர் வரை செயற்படுத்த ரூ. 21.6 பில்லியன்கள் தேவைப்படும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

உலக உணவுத் திட்டம் கொழும்பில் பின்தங்கிய பகுதிகளில் உள்ள கர்ப்பிணிப் பெண்களுக்கு உணவு வவுச்சர்களை வழங்கும் திட்டத்தை கடந்த ஜூன் 16 திகதி ஆரம்பித்து வைத்தது.

இதன்படி ஒருவருக்கு ரூ. 15,000 மதிப்புள்ள வவுச்சர் வழங்கப்படுகிறது.

நான்கு பேர் கொண்ட ஒரு குடும்பத்திற்கு குறைந்தபட்ச சத்துள்ள உணவை பெறும் பொருட்டு இத்தொகை கணக்கிடப்பட்டுள்ளது.

மேலும் ரூ.15,000 என்பது அத்தொகையின் அரைவாசியாகும்.

இந்த வவுச்சர்களை அங்கிகரிக்கப்பட்ட பல்பொருள் அங்காடிகளில் கொடுத்து பொருட்களை பெற்றுக்கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.(4)

# பாடசாலைகளை நடத்துவது குறித்து மீள்பரிசீலனை

## கல்வி அமைச்சு தீர்மானம்

(கொழும்பு)

இவ்வாரம் நகர்ப்புறங்களில் பாடசாலைகளை நடத்துவது குறித்து மீள்பரிசீலனை செய்ய கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

நாட்டில் நிலவும் எரிபொருள் நெருக்கடியை கருத்தில் கொண்டு இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

எரிபொருள் கப்பல் வருவது மேலும் தாமதமடையும் என எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர விடுத்த டுவிட்டர் செய்தியே இதற்குக் காரணமாக கூறப்படுகின்றது.

எவ்வாறாயினும் தற்போதைய நிலவரத்தை கருத்திற் கொண்டு கடந்த வாரம் நடைபெறாத பாடசாலைகளை நாளை செவ்வாய்க்கிழமை முதல் நகர்ப்புறங்களில் நடத்த முடியுமா என்பது குறித்து இன்று தீர்மானம் எடுக்க கல்வி அமைச்சு தயாராகி வருகிறது. (4-6).

# எரிபொருள் நிலையத்தில் குழப்பம் பொலிஸாரை தாக்கிய இளைஞர்கள்

(திருகோணமலை)

திருகோணமலையில் எரிபொருள் பெற்றுக் கொள்ளச் சென்ற இளைஞர்கள் சிலர் பொலிஸாரின் கடமைக்கு இடையூறு விளைவித்த சம்பவமொன்று நேற்று இடம்பெற்றுள்ளது.



திருகோணமலை - கந்தளாய் எரிபொருள் நிலையமொன்றில் எரிபொருள் பெற்றுக்கொள்ளச் சென்ற இளைஞர்கள் சிலர் குடிபோதையில் பொலிஸாரின் கடமைக்கு இடையூறு ஏற்படுத்தியதோடு பொலிஸார் ஒருவரையும் தாக்க முயன்றுள்ளனர்.

இதனால், எரிபொருள் நிலையத்தில் சில மணி நேரம் அமைதியின்மை ஏற்பட்டதோடு மேலதிக பொலிஸாரும் இராணுவத்தினரும் வரவழைக்கப்பட்டுள்ளனர்.

எனினும் குடிபோதையில் இடையூறு ஏற்படுத்திய நபர்கள் தப்பிச் சென்றுள்ளார்கள்.

பின்பு வழமை போன்று எரிபொருள் விநியோகம் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (4-6)

# இராசிபலன்

27.06.2022
ஆனி 13, திங்கட்கிழமை
சதுர்த்தசி முழுவதும்

ரோகிணி பிற்பகல் 5.26 மணிவரை
சுப நேரம் -11.55-1.25 மணிவரை
இராகு காலம் -7.25-8.55 மணிவரை

உலக நீரிழிவு நோய் தினம்
சந்திராஷ்டமம்-சுவாதி,விசாகம்

வளவன்

**மேஷம்** எடுத்த காரியத்தில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், வீட்டை அழகாக வைத்திருக்கும் எண்ணம் உருவாகும், குடும்பத் தேவைகள் பூர்த்தியாகும், வாக்கு மேன்மையுண்டு.

**ரிஷபம்** எந்தவொரு வேலையையும் நாளையென தள்ளி வைக்காமல் இன்றே செய்து முடிப்பீர்கள், பணத்தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், குடும்ப பொறுப்புக்கள் கூடும் நாள்.

**மிதுனம்** உறவினர், நண்பர்கள் தொடர்பான வேலைகளுக்காக சற்று அலைய நேரிடலாம், வழிபாட்டால் திருப்தி காண வேண்டிய நாள், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு.

**கடகம்** வருமானம் பெருகி வளம் காணும் நாள், உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள், காரிய அனுகூலமுண்டு, பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், போசன சுகமுண்டு.

**சிம்மம்** முன்னேற்றப்பாதையில் அடியெடுத்து வைப்பீர்கள், உற்ற நண்பர்கள் உறுதுணையாக இருப்பர், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், கௌரவமான நாள்.

**கன்னி** பற்றாக்குறை தீர்ந்து பணவரவு கிடைக்கும் நாள், பயணங்களால் பலனுண்டு, உறவினர் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர்.

**துலாம்** பொது வாழ்வில் வீண் பழிகள் ஏற்படாமல் பார்த்துக் கொள்வது நல்லது, வரவும் செலவும் சமமாகும் நாள், எடுத்த காரியங்களில் சிறு தடை தாமதங்கள் ஏற்படலாம்.

**விருச்சிகம்** தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம், உறவினர்களின் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், போசன சுகமுண்டு.

**தனுசு** சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறும் வாய்ப்புண்டு, ஆற்றல் மிக்கவர்கள் உங்களுக்கு பின்னணியாக செயற்படுவர், அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

**மகரம்** செய் தொழிலில் மேன்மையும் உயர்வும் கிடைக்கும், வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், மறைமுக போட்டிகள் மாறும் பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும்.

**கும்பம்** உறவினர் வழியில் மனதிற்கினிய சம்பவமொன்று நடைபெறலாம், புண்ணிய காரியங்களுக்கு செலவு செய்து மகிழும் நாள், பொழுது போக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**மீனம்** குடும்பத்தினர் உங்களின் குணமறிந்து நடந்து கொள்வர், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும் வாய்ப்புண்டு.

இறைவனின் அழகில் உன்னை நீ இழந்துவிட தியானம் செய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில்
# விரைவில் தீர்வு கிட்டும்
## யாழில் நீதி அமைச்சர் தெரிவிப்பு

**(யாழ்ப்பாணம்)**
**காணாமற்போனோர் தொடர்பான அலுவலகத்தின் செயற்பாடுகளை துரிதப்படுத்தி, அதனூடாக விசாரணைகளை மேற்கொண்டு விரைவில் நீதியை பெற்றுத் தருவதாக நீதி அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**



யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்டுள்ள அமைச்சர், கல்வியங்காட்டில் அமைந்துள்ள காணாமற்போனோர் பற்றிய அலுவலகத்தில் நேற்று முன்தினம் உறவுகளை சந்தித்து கலந்துரையாடிய பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தற்போதுவரை கிடைத்துள்ள முறைப்பாடுகள் குறித்து விசாரணைகள் இடம்பெறுவதாகவும் மேலும் இழப்பீட்டு அலுவலகம் மற்றும் தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்திற்கான அலுவலகத்தினாலும் பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை அரசியலமைப்பின் 21 ஆவது திருத்தம் கொண்டுவரப்பட்ட பின்னர் புதிய அரசியலமைப்பு கொண்டு வரும் முயற்சிகள் இடம்பெறும் என நீதி அமைச்சர் தெரிவித்தார். (4-6)

# வீட்டுத் தோட்ட பயிர்ச்செய்கைக்கான நாற்று விதைகள் வழங்கி வைப்பு



(குப்பிழான்)
நல்லூர் பிரதேச சபையின் ஏற்பாட்டில் மேற்படி பிரதேச சபையின் தவிசாளர் ப.மயூரனின் வீட்டுத்தோட்டத்தை ஊக்குவிக்கும் திட்டத்தின் அடிப்படையில், நல்லூர் பிரதேச சபையின் ஒழுங்கமைப்பில் சாந்தி அக்ரோ நீட்ஸ் நிறுவனப் பங்களிப்புடன் வட்டார ரீதியாகத் தெரிவு செய்யப்பட்ட 120 பயனாளிகளுக்கு வீட்டுத்தோட்ட விவசாயப் பயிர்ச்செய்கைக்கான நாற்று விதைகளும் அதனோடு இணைந்த பொருட்களும் கடந்த வியாழக்கிழமை வழங்கி வைக்கப்பட்டன. (4-6-18)

# தனிமையில் வசித்த மூதாட்டி வன்புணர்வுக்குட்படுத்தியே கொலை

(யாழ்ப்பாணம்)
காங்கேசன்துறை -கொல்லங்கலட்டியில் வீட்டில் தனிமையில் வாழ்ந்த மூதாட்டி கொடுமையாக வன்புணர்வுக்கு உட்படுத்திய பின் கொலை செய்யப்பட்டுள்ளார் என்று சட்ட மருத்துவ அதிகாரியின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த வெள்ளிக்கிழமை கழுத்தில் வெட்டுக்காயங்களுடன் மீட்கப்பட்ட மூதாட்டியின் சடலம் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை சட்ட மருத்துவ அதிகாரி முன்னிலையில் உடற் கூற்றுப் பரிசோதனைக்கு உள் படுத்தப்பட்டது.

மூதாட்டி கொடுமையாக வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்ட பின்னரே கொலை செய்யப்பட்டுள்ளார் என்று உடற்கூற்றுப் பரிசோதனை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சந்தேக நபர் தொடர்பில் ஆதாரங்கள் கிடைக்கப்பெற்றுள்ள நிலையில் விரைவில் கைது செய்யப்படுவார் என பொலிஸார் தெரிவித்தனர்.(4-6-18-33)

# கைதடியில் இனந்தெரியாத கும்பல்
# வீடு புகுந்து தாக்குதல்
## இருவர் காயம்

(சாவகச்சேரி)
சாவகச்சேரி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கைதடி மேற்குப் பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை இரவு இடம்பெற்ற தாக்குதல் சம்பவத்தில் சகோதரர்கள் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

இரவு 8 மணியளவில் வீடு புகுந்த இனந்தெரியாத கும்பல் ஒன்று சகோதரர்கள் மீது இரும்புக் கம்பிகளால் தாக்குதல் நடத்தி விட்டு தப்பித்துச் சென்றிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதில் கைதடி மேற்குப் பகுதியைச் சேர்ந்த 38 மற்றும் 31 வயதான சகோதரர்கள் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். தாக்குதல் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (4-6-30)

# பெற்றோல் பெற வரிசையில் நின்ற வடமாகாண சுகாதார பணிப்பாளர்



(யாழ்ப்பாணம்)
வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவ கலாநிதி ஆ.கேதீஸ்வரன் எரிபொருள் வரிசையில் காத்திருந்து தனது மோட்டார் சைக்கிளுக்கு பெற்றோல் பெற்றுக் கொண்டுள்ளார்.

சுகாதார சேவைகள் திணைக்களத்தினருக்கான பெற்றோல் விநியோகம் நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை வடமராட்சி, புலோலி பல நோக்குக்கூட்டுறவுச் சங்க எரிபொருள் நிரப்பு நிலையத்தில் விநியோகிக்கப்பட்டது.

இதன் போது 4 கிலோ மீற்றர் வரை மோட்டார் சைக்கிள்கள் மற்றும் முச்சக்கர வண்டிகள் வரிசையில் காத்திருந்தன.

இவ் வரிசையில் வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரனும் காத்திருந்து தனது மோட்டார் சைக்கிளுக்கான பெற்றோலைப் பெற்றுக் கொண்டுள்ளார்.(4-6-18-33-60)



இராணுவத்தினரால் தென்மராட்சிப் பிரதேச மக்கள் மற்றும் பாடசாலை மாணவர்களுக்கு நேற்று ஞாயிற்றுக்கிழமை 11 இலட்சம் ரூபாய் பெறுமதியான உதவித்திட்டத்தின் சமூக சேவகர் சண்முகரத்தினம் ரஜீகரன் தனது தாயாரின் 76 ஆவது பிறந்தநாளை முன்னிட்டு இராணுவத்தினரின் ஊடாக 22 பாடசாலை மாணவர்களுக்கு துவிச்சக்கரவண்டிகளும், தேவைப்பாடுடைய 50 பொதுமக்களுக்கு பெறுமதியான உலருணவுப் பொதிகளும் வழங்கி வைத்தார். (படம்: சுபேசன்)



நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ இரண்டாம் மொழி சிங்கள கற்கையை பூர்த்தி செய்த மாணவர்களுக்கான சான்றிதழ்களை நேற்று முன்தினம் வழங்கி வைத்தார். யாழ்ப்பாணம் இந்து பௌத்த கலாசார பேரவையில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு குறித்த சான்றிதழ்கள் வழங்கி வைத்தார். (படம்: சிவசாந்தன், கஜிந்தன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எரிபொருள் நிலையங்களில் இடம்பெறும்

# கலவரங்கள், மோதல்களை

# வீடியோ பதிவு செய்யுங்கள்

## பொலிஸாருக்கு உத்தரவு

**(கொழும்பு)**

**எரிபொருள் நிரப்பு நிலையங்களில் கலவரத்தை உருவாக்குபவர்களை வீடியோ பதிவு செய்யுமாறு அனைத்து பொலிஸ் நிலையங்களுக்கும் பொலிஸ்மா அதிபர் சி.டி.விக்ரமரத்ன உத்தரவு பிறப்பித்துள்ளார்.**

எரிபொருள் நிரப்பு நிலையங்களில் நடக்கும் கலவரம், மோதல்கள் போன்ற அனைத்து சம்பவங்களையும் வீடியோவில் பதிவு செய்யுமாறு நிரப்பு நிலையங்களில் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுள்ள பொலிஸ் அதிகாரிகளுக்கே அவர் உத்தரவிட்டுள்ளார்.

வீடியோ காட்சிகளின் நகலை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியிடம் கொடுத்து பொலிஸ் புத்தகங்களில் பதிவு செய்ய வேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளார்.

எரிபொருள் நிரப்பு நிலையங்கள் தொடர்பான சம்பவங்கள் தொடர்பில் வழக்குத் தொடர்வதற்கு இந்தக் காணொளிகள் பயன்படுத்தப்பட வேண்டுமென பொலிஸ்மா அதிபர் தனது உத்தரவில் மேலும் வலியுறுத்தியுள்ளார்.

இதேவேளை கடந்த வாரம் யாழில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையம் ஒன்றில் இடம்பெற்ற வன்முறை சம்பவத்தில் இளைஞர் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்திருந்தார்.

அவ்வாறு குறித்த இளைஞர் மீதான தாக்குதலின் போது அந்த எரிபொருள் நிரப்பு நிலையத்தில் சிசிரிவி கமரா இயங்கவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (4)

# தேர்தலை நடத்துவதற்கு தகுந்த காலம் இதுவல்ல

## முன்னாள் பிரதமர் மகிந்த

(கொழும்பு)

நாட்டில் தற்போது நிலவி வரும் நெருக்கடி நிலையை தீர்த்து தேர்தலை நடத்த வேண்டும் என முன்னாள் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இன்று தேர்தலை நடத்த வேண்டும் என எதிர்க்கட்சியில் உள்ள பலர் பேசினாலும், தற்போதைய காலம் அதற்கு உகந்தது அல்ல என்பதே தமது கருத்து என அவர் தெரிவித்துள்ளார்.

பொதுஜன பெரமுன உறுப்பினர்களுடன் அண்மையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே அவர் இந்த கருத்துக்களை வெளியிட்டுள்ளார்.

மக்கள் மிகவும் இக்கட்டான காலகட்டத்தில் இருப்பதாகவும், அவர்களால் தேர்தல் மனப்பான்மையை வளர்க்க முடியாது எனவும், தற்போதைய ஆட்சியாளர்கள் நாட்டின் பிரச்சினைகளை தீர்க்க உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த நெருக்கடிகளுக்கு தனித்தனியாக அல்லாமல் அனைத்து கட்சிகளும் எதிர்க் கட்சிகளும் கட்சி நிறம் பாராது ஒன்றிணைந்து தீர்வு காண வேண்டும் எனவும், நாட்டின் நெருக்கடிகளை தீர்ப்பதற்கு ஆளும் கட்சியான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன உதவ தயாராக இருப்பதாகவும் முன்னாள் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். (4)

# ஆஸி.செல்ல முற்பட்டு இதுவரை 399 பேர் கைது

(கொழும்பு)

இந்த ஆண்டு இதுவரையில் சட்டவிரோதமான முறையில் அவுஸ்திரேலியாவுக்குச் செல்ல முற்பட்ட 399 பேர் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேகநபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

சட்டவிரோதமாக இடம்பெயர முயற்சிப்பவர்களிடம் இருந்து கடத்தல்காரர்கள் 200,000 முதல் 1,000,000 வரை பெற்றுக் கொள்வதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த நடவடிக்கையில் ஈடுபடும் கடத்தல்காரர்களுக்கு 1 முதல் 5 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை விதிக்கப்படும் என பொலிஸ் பேச்சாளர் எச்சரித்துள்ளார். (4)

# பேருந்து கட்டணம் திருத்தப்படாவிட்டால் நாளை முதல் சேவை நிறுத்தம்

## தனியார் பேருந்து உரிமையாளர் சங்கம்

(கொழும்பு)

பேருந்து கட்டணம் திருத்தப்படவில்லை எனில், செவ்வாய்க்கிழமை முதல் பேருந்து சேவைகள் நிறுத்தப்படும் என தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

டீசல் விலை அதிகரிப்புடன் வருடாந்த பேருந்து கட்டணத் திருத்தம் தொடர்பில் இன்று பரிசீலிக்குமாறு இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கம் நேற்று கோரிக்கை விடுத்துள்ளது.

இதற்கு சாதகமான பதில் கிடைக்காவிடின் நாளை முதல் பேருந்து சேவைகள் நிறுத்தப்படும் என தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கத் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

வருடாந்த பேருந்து கட்டண திருத்தம் ஒவ்வொரு ஜுலை 1 முதல் நடைமுறைக்கு வரும். குறுகிய காலத்திற்குள் இரண்டு முறை எரிபொருள் விலையேற்றத்தை எதிர்கொள்ள வேண்டியிருந்தது.

இப்போது, பேருந்துகளை நட்டத்தில் இயக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம். எனவே, இன்று வருடாந்த பேருந்து கட்டண திருத்தத்திற்கு பச்சை கொடி காட்டப்படாவிட்டால், நாளை முதல் பேருந்து சேவையை நிறுத்துவதற்கு தீர்மானித்துள்ளோம் என விஜேரத்ன மேலும் தெரிவித்தார். (4)

# மனைவியை கோடரியால் தாக்கி கொலை செய்த கணவன்

## நுவரெலியாவில் கொடூரம்

(ஷற்றன்)

நுவரெலியா சாந்திபுர ஒலிபண்ட் மேல் பிரிவு தோட்டத்தைச் சேர்ந்த இளம் தாய் ஒருவர் கணவரின் கோடாரி தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்ததாக நுவரெலியா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளதாக விசாரணைகளை மேற்கொண்டு வரும் நுவரெலியா பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பிரிவினர் தெரிவித்தனர்.

குறித்த சம்பவத்தில் இரண்டு பெண் பிள்ளைகளின் தாயே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார். கணவருக்கும் மனைவிக்கும் இடையில் வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது.

இதன்போது ஆத்திரமடைந்த கணவன், கோடரியால் மனைவியின் தலையில் தாக்கியுள்ளார். சம்பவ இடத்திலேயே மனைவி உயிரிழந்ததுடன், கணவன் தனது மகளைத் தூக்கிக் கொண்டு, இரவோடு இரவாக நுவரெலியா பொலிஸ் நிலையத்திற்குச் சென்று சரணடைந்துள்ளார். (4)

# வீட்டில் தீ விபத்து

## கணவன், மனைவி உயிரிழப்பு

(கொழும்பு)

கஹதுட்டுவ-பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் சிக்கி இரண்டு பேர் உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த வீட்டில் வசித்து வந்த 41 வயதுடைய நபரும் 38 வயதுடைய அவரது ம்னைவியுமே இவ்வாறு உயிரிழந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

தீ விபத்து ஏற்பட்டதில் பலத்த காயமடைந்த குறித்த இருவரும் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைப் பெற்றுவந்த நிலையில் உயிரிழந்துள்ளதாக மருத்துவமனை நிர்வாகம் தெரிவித்துள்ளது.

மேலும், இவர்களது இரண்டு பிள்ளைகளும் தற்போது காயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சிகிச்சைப் பெற்று வருகின்றனர்.

தீ விபத்து ஏற்பட்டமைக்கான காரணம் இதுவரையில் கண்டறியப்படாத நிலையில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (4)

## பதுக்கி வைக்கப்பட்டிருந்த நிலையில்

# 64 ஆயிரம் லீற்றர் எரிபொருள் இதுவரை பொலிஸாரால் மீட்பு

(கொழும்பு)

நாட்டின் பல பகுதிகளிலும் அண்மைக்காலமாக எரிபொருள் பதுக்கல் தொடர்பில் பொலிஸ் மற்றும் விசேட அதிரடிப்படையினரால் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்புக்களில் சுமார் 64,000 லீற்றருக்கும் அதிக பெற்றோல், டீசல் மற்றும் மண்ணெண்ணெய் என்பன மீட்க்கப்பட்டுள்ளதோடு , 600 இற்கும் மேற்பட்ட சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.


அத்தோடு எரிபொருள் நிரப்பும் நிலையங்களிலுள்ள எரிபொருள் தாங்கிகளை திறந்து காண்பிக்குமாறு பொதுமக்களால் பொலிஸார் வலியுறுத்தப்படுவதாகவும், அனைவரதும் பாதுகாப்பினைக் கருதி அவ்வாறான செயற்பாடுகளில் தலையிட வேண்டாம் என்றும் பொலிஸ் தலைமையகத்தினால் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் பேச்சாளர் தெரிவித்தார். (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## முகநூல் தரிசனம் 81

# ஒரு இந்தியரின் சமயோசிதயுக்தி



நியூயோர்க்நகரில்இருக்கும் ஒரு புகழ் பெற்ற வங்கிக்குள் நுழைந்த அந்த இந்தியர் ஒருவர் அங்கிருந்த அதிகாரியிடம் தனக்கு 5000 டொலர்கள் கடன் வேண்டும் என்றும் தான் இந்தியாவிற்கு இரண்டு வார பயணமாக செல்வதாகவும் திரும்பிவந்து கடன் பணத்தைக் கட்டி விடுவதாகவும் சொன்னார்.

அதற்கு அந்த அதிகாரி, உங்களுக்கு கடன் கொடுக்க வேண்டுமெனில் நீங்கள் அதற்காக ஏதாவது உத்தரவாதம் கொடுக்க வேண்டும் என்றார். இதைக் கேட்ட அந்த இந்தியர் வங்கிக்கு முன்னால் வைக்கப்பட்டிருந்த தனது புத்தம்புதிய ஃபெராரி கார் சாவியை அந்த அதிகாரியிடம் கொடுத்ததோடு கூடவே காரின் உரிமைப் பத்திரங்களையும் கொடுத்தார்.

வங்கி அதிகாரி திருப்தியுடன் அந்த இந்தியருக்கு அவர் கேட்ட கடனை கொடுத்தார். 250,000 டொலர் மதிப்புள்ள ஃபெராரி காரை வெறும் 5000 டொலர் கடன் வாங்க பயன்படுத்திய அந்த இந்தியரை நினைத்து வங்கியின் தலைவரும் மற்ற அதிகாரிகளும் சிரித்தனர்.

பிறகு வங்கியின் ஊழியர் ஒருவர் அந்தக் காரை வங்கியின் கீழ்தளத்தில் உள்ள கார்கள் நிறுத்துமிடத்திற்கு கொண்டு சென்று நிறுத்தினார். இரண்டு வாரங்கள் கழித்து திரும்பி வந்த இந்தியர் அந்த வங்கிக்கு சென்று தான் வாங்கிய 5000 டொலரையும் அதற்கான வட்டியாக 5.41 டொலரையும் திருப்பிக்கொடுத்த பிறகு அவருக்கு கடன் கொடுத்த அந்த வங்கி அதிகாரி, “சேர், உங்களுடன் வியாபாரம் செய்ததில் எங்களுக்கு மிகவும் மகிழ்ச்சி. நமது பரிவர்த்தனை மிக நல்ல முறையில் நடந்தது.

ஆனால் ஒரே ஒரு விடயம்தான் எங்களுக்கு இன்னும் புரியவில்லை. நீங்க போன பிறகு உங்களைப் பத்தி நாங்க விசாரிச்சோம். நீங்க ஒரு பெரிய கோடீஸ்வரர் என்று தெரிந்தது. இவ்வளவு பெரிய பணக்காரர் வெறும் 5000 டொலர் கடன் வாங்குகிறாரே என்று எங்களுக்கு ஒரே குழப்பமாய் இருந்தது” என்றார்.

அதற்கு அந்த இந்தியர், “எனக்கு நியூயோர்க் நகரத்தில் கார் நிறுத்தும் வசதி இல்லை. பிறகு எங்கு கொண்டு போய் நான் எனது காரை இவ்வளவு குறைந்த 5.41 டொலர் கட்டணத்திற்கு அதுவும் நான் திரும்பி வரும் வரை யாரும் திருடிக்கொண்டுப் போகாமல் பாதுகாப்பாக நிறுத்த முடியும்” என்றார்.

**அன்பு வாசகர்களே!**

முகநூலில் உங்கள் மனதைத் தொடும் பதிவுகளை வலம்புரியின் “முகநூல் தரிசனம்” பகுதிக்கு உங்கள் பெயரைக் குறிப்பிட்டு Valampurii Seithy எனும் வலம்புரி முகப் புத்தகத்திற்கு Share செய்யுங்கள் அல்லது 076 636 3378 எனும் viber இலக்கத்திற்கு அல்லது valampurii@yahoo.com எனும் E-Mail இற்கு அனுப்பி வையுங்கள்.

# பெலாரஸுக்கு அணு ஆயுதங்களை அனுப்பும் ரஷ்யா

(மொஸ்கோ)

தனது நட்பு நாடான பெலாரஸுக்கு அணுசக்தி திறன் கொண்ட குறுகிய தூர ஏவுகணை வரும் மாதங்களில் ரஷ்யா அனுப்பும் என ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் தெரிவித்துள்ளார்.

இஸ்கண்டர்-எம் ஏவுகணை அமைப்புகள் மூலம் (Iskander-M systems) வழக்கமான மற்றும் அணுசக்தி வகைகளான பாலிஸ்டிக் மற்றும் க்ரூஸ் ஏவுகணைகளை ஏவ முடியும் என்று அவர் கூறினார்.

இந்த வகை ஏவுகணைகள் 500 கிலோ மீற்றர் தூரம் வரை சென்று இலக்குகளைத் தாக்க வல்லவை.

கடந்த பெப்ரவரி 24 உக்ரைன் மீது படையெடுப்பதற்கான ஜனாதிபதி புடின் முடிவைத் தொடர்ந்து ரஷ்யாவிற்கும் மேற்கு நாடுகளுக்கும் இடையிலான பதற்றங்கள் அதிகரித்துள்ளன.

அப்போதிருந்து, அணு ஆயுதங்கள் குறித்து பல எச்சரிக்கைகளை புடின் விடுத்துள்ளார். ரஷ்யா - உக்ரைன் பிரச்சினையில் மேற்கத்தேய நாடுகள் தலையிட வேண்டாம் என்றும் அவர் எச்சரித்தார்.

இந்நிலையில் சென். பீட்டர்ஸ்பர்க்கில் பேசிய புடின், பெலாரஷ்யன் SU-25 போர் விமானங்களை அணு ஆயுதங்களை எடுத்துச் செல்லும் வகையில் மாற்றியமைக்க ரஷ்யா உதவும் என்று தெரிவித்தார். (4)

# போர... உலக...

## பிரித்தானி...

(லண்டன்) —

ரஷ்ய-உக்ரை... வெற்றி பெற்றா... பாரிய ஆபத்து உ... ஜோன்சன் எச்சரி...

உக்ரைனுக்கு எந்த வொரு சாதகமும், இல்லாத ரஷ்யாவுடனான அமைதிப் பேச்சுவார்த்தைக்கு உக்ரைன் வலுக்கட்டாயமாக தள்ளப்படலாம் என நினை

# ஸ்பெயினில் பார்வையாளர்களை கவர்ந்த சர்வதேச நாய்கள் கண்காட்சி

(மேட்ரிட்)

ஸ்பெயினில் உள்ள மேட்ரிட் நகரில் சர்வதேச நாய்கள் கண்காட்சி கோலாகலமாக நடைபெற்றது.



இந்தக் கண்காட்சியில் உலகின் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த விதவிதமான நாய்கள் கலந்து கொண்டன. பிரபலமான டெக்கெல்ஸ் இன நாய்கள் உட்பட 400 இற்கும் மேற்பட்ட நாய்கள் சுறுசுறுப்பாக பங்கேற்று அசத்தியது.

அழகிய நாய்கள்,எஜமானர்களுக்கு கட்டுப்படும் நாய்கள் என பல்வேறு பிரிவுகளில் இந்தப் போட்டிகள் நடத்தப்பட்டன. ஒரே இடத்தில் பல வகையான கண்ணை கவரும் நாய்களையும், அவைகள் துருதுருவென போட்டியில் கலந்து கொண்டதையும் பார்த்து பார்வையாளர்கள் பரவசம் அடைந்தனர்.

இந்தப் போட்டியில் பெரிய அளவில் மு... இல்லாத சில நாய்கள் கலந்து கொண்டன... இந்த நாய்களை பொதுமக்கள் ஆச்... ரியத்துடன் பார்த்தனர்.

போட்டியில் பங்கேற்று அசத்திய... நாய்களுக்கு மதிப்பெண் அளிக்கப்பட்... பரிசு மற்றும் விருதுகள் வழங்கப்பட்டன... சுமார் 15 ஆயிரம் நாய்கள் பங்கேற்றன... கொரோனா பரவல் காரணமாக 2... ஆண்டுகளுக்கு பிறகு இந்தப் போட்... நடத்தப்பட்டது. (4


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

# ாரில் புடின் வென்றால்
# க நாடுகளுக்கு ஆபத்து

## னிய பிரதமர் எச்சரிக்கை

**ரைன் யுத்தத்தில் ரஷ்ய ஜனாதிபதி புடின் றால் எதிர் காலத்தில் உலக நாடுகளுக்கு து உள்ளது என பிரித்தானிய பிரதமர் போரிஸ் ச்சரித்துள்ளார்.**



ப்பதாகவும் பிரித்தானிய பிரதமர் போரிஸ் ஜோன்சன் தெரிவித்துள்ளார்.

உக்ரைன் -ரஷ்யா இடையிலான போர் 122 வது நாளாக நடைபெற்று வரும் நிலையில், ரஷ்யாவிற்கு எதிரான போர் தாக்குதலில் உக்ரைனுக்கு ஆதரவாக பிரித் தானியா ஆயுதங்கள் மற்றும் உளவுத்துறை அறிக் கைகள் போன்ற உதவிகளை வழங்கி வருகிறது.

மேலும் ரஷ்யாவிற்கு எதிராக பல அடுக்கு பொருளாதார தடையையும் பிரித்தானிய அரசாங்கம் அடுத்தடுத்து விதித்து வருகிறது. (4)

---

## ஸ்பெயினுக்குள் நுழைய முயன்ற
# 23 அகதிகள் பலி

(மட்ரிக்)

மொராக்கோ எல்லை வழியாக ஸ்பெயினுக்குள் நுழைய முயன்ற ஆபிரிக்க அகதிகள் மற்றும் பாதுகாப்பு துறையினருக்கு இடையே ஏற்பட்ட மோதல் மற்றும் நெரிசலில் சிக்கி 23 பேர் உயிரிழந்துள்ளனர்.

மொராக்கோவுக்கும் ஸ்பெயினுக்கும் இடையிலான மெலில்லா பகுதிக்கு இடையிலான வேலித் தடுப்பைத் தாண்டி, ஸ்பெயின் பகுதிக்குள் செல்ல ஏராளமான அகதிகள் கடந்த வெள்ளிக்கிழமை முயன்ற போது கூட்ட நெரிசல் மற்றும் மோதல் ஏற்பட்டது.

இதில் 23 பேர் பலியானதுடன், பெருமளவான அகதிகளும் பொலிஸாரும் காயமடைந்தனர்.

சுமார் 2,000 அகதிகள் மொராக்கோவின் நடோர் நகரிலிருந்து மெலிலாவுக்குள் முயன்றபோது, நெரிசல் ஏற்பட்டது. அவர்களில் 133 பேர் ஸ்பெயினுக்குள் நுழைந்துவிட்டனர் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

மெலிலா மற்றும் மொராக்கோ நகரை பிரிக்கும் இரும்பு வேலியில் ஏற முயன்றபோது மக்கள் நெரிசல் காரணமாக இறந்ததாக மொராக்கோ அதிகாரிகள் தெரிவித்தனர்.

அகதிகளைத் தடுக்க முயன்ற 140 மொராக்கோ பாதுகாப்பு அதிகாரிகள் மற்றும் எல்லை தாண்ட முயன்ற 76 பொதுமக்கள் காயமடைந்ததாக மொராக்கோவின் உள்துறை அமைச்சு நேற்று முன்தினம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (4)

---

## மற்றுமொரு உக்ரைன் நகரத்தை
# கைப்பற்றியது ரஷ்யா



(கீவ்)

பல வார கடும் சண்டைக்குப் பின்னர் உக்ரைன் கிழக்கு - லுஹான்ஸ் பிராந்தியத்தின் முக்கிய போர்க்கள நகரமான சீவிரோடோனெட்ஸ் நேற்று முன்தினம் சனிக்கிழமை ரஷ்யப் படைகளால் முழுமையாகக் கைப்பற்றப் பட்டது.

சீவிரோடோனெட்ஸ் நகரம் முழுமையாக ரஷ்யப் படைகளால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளதாக அந். நகர மேயர் ஒலெக்சாண்டர் ஸ்ட்ரியுக் உறுதி செய்துள்ளார்.

நகரம் இப்போது ரஷ்யாவின் முழு ஆக்கிரமிப்பின் கீழ் உள்ளது. அவர்கள் அங்கு தங்கள் சொந்த அதிகாரத்தை நிறுவ முயற்சிக்கிறார்கள். எனக்குத் தெரிந்த வரை அவர்கள் நகரத்துக்கு பிரத்தியேகமாக ஒரு தளபதியை நியமித்துள்ளனர் என்று மேயர் ஒலெக்சாண்டர் ஸ்ட்ரியுக் உக்ரைன் தேசிய தொலைக்காட்சியில் கூறினார்.

சீவிரோடோனெட்ஸ் ரஷ்யாவிடம் விழுந்ததன் மூலம் லுஹான்ஸ்க் பிராந்தியம் மற்றும் அதன் அண்டை பிராந்தியமான டோனெட்ஸ்கின் பெரும் பகுதிகள் ரஷ்யாவின் கட்டுப்பாட்டுக்குள் வந்துள்ளன.

இந்நிலையில் நேற்று முன்தினம் சனிக்கிழமை வழக்கமான வீடியோ உரையில் பேசிய உக்ரைன் ஜனாதிபதி வோலோடிமிர் ஜெலென்ஸ்கி, ரஷ்யாவால் ஆக்கிரமிக்கப்பட்ட எங்கள் அனைத்து நகரங்களையும் மீளக் கைப்பற்றுவோம் என்று உறுதியளித்தார். ரஷ்யாவுடனான போர் கடினமான கட்டத்திற்குள் நுழைந்துள்ளது. இந்தப் போரில் இன்னும் எத்தனை அழிவுகள் மற்றும் இழப்புகள் இருக்கும் என்று எனக்குத் தெரியாது என்றும் அவர் கூறினார். (4)

---

ந்த
ட்சி



வில் முடி
ண்டன.
ஆச்ச
சத்திய
கப்பட்டு
பட்டன.
கற்றன.
ாக 2
போட்டி
(4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரல்களில் எரிபொருள் விநியோகம் தடுத்து நிறுத்துமாறு மக்கள் கோரிக்கை

(நெளுக்குளம்)

வவுனியாவில் அமைந்துள்ள எரிபொருள் நிலையம் ஒன்றில் அரசாங்க அதிபரின் உத்தரவு களை மீறி பரல்களில் எரி பொருள் விநியோகம் இடம் பெற்றுவருவதாகவும் இந் நடவடிக்கைகளை தடுத்து நிறுத்துமாறு பொதுமக்கள் பிரதேச செயலாளரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அண்மையில் இடம்பெற்ற அரசாங்க அதிபரின் கலந்துரையாடலில் பரல்களில் பெற்றோல் விநியோகம், குதங்களில் சேமித்து வைப்பதை தவிர்த்து வரிசைகளில் காத்திருக்கும் பொதுமக்களின் தேவைகளை நிறைவேற்றுவதற்கு முக்கியத்துவம் வழங்குமாறு எரிபொருள் நிலைய உரிமையாளர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டது.

நேற்று முன்தினம் குறித்த எரிபொருள் நிலையத்தில் எரிபொருள் முடிந்துள்ளதாக தெரிவித்துவிட்டு தனியார் நிறுவனங்கள் சிலவற்றிற்கு பெற்றோல் விநியோகம் செய்யப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது. இதையடுத்து இச்சம்பவத்தை முறைப்பாடாக பொது மக்கள் வவுனியா வடக்கு பிரதேச செயலாளரிடம் தெரிவித்தனர். இவ்விடயம் குறித்து வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் இ.பிரதாபனிடம் கேட்ட போது. இவ்வாறான முறைப்பாடு கிடைக்கப்பெற்றுள்ளது எனவும் அரசாங்க அதிபரின் தீர்மானங்களை மீறி இடம் பெற்ற இச்சம்பவத்தால் அங்குள்ள பலர் பாதிக்கப்பட்டுள்ள தாகவும் இது குறித்து அரசாங்க அதிபர் உள்ளிட்ட அதிகாரிகளிடம் முறையிடவுள்ளதாகவும் தெரிவித்தார். (4-6-299)




யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிக பீடத்தினால் நடத்தப்படும் நுண்நிதி டிப்ளோமா கற்கை நெறியின் ஐந்தாம் அணி மாணவர்களுக்கான திசைமுகப்படுத்தல் அறிமுக நிகழ்வு நேற்று கலாசாலை வீதி, திருநெல்வேலியில் அமைந்துள்ள முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிக பீடத்தில், பீடாதிபதி பேராசிரியர் பா. நிமலதாசன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா பிரதம விருந்தினராக கலந்து கொண்டு மங்கள விளக்கு ஏற்றினார்.

(படம்-சிவசாந்தன்,கஜிந்தன்)

# சவால்களுக்கு மத்தியில் மருத்துவத் துறை

## அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம்



(கண்டாவளை)

கிளிநொச்சி சுகாதார மருத்துவ அதிகாரி மீது தாக்குதல் மேற்கொள்ள முயற்சித்தமை, மருத்துவர்களுக்கான மேலதிக கொடுப்பனவு கிடைக்கப்பெறாமை மற்றும் மருந்துகளுக்கான பற்றாக்குறை என்பவற்றால் மருத்துவத் துறை பல்வேறு பாதிப்புக்களை எதிர் கொள்வதாக அந்த மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தின் மருத்துவ அதிகாரிகள் சங்கத்தினால் நேற்று ஏற்பாடு செய்யப்பட்ட ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

மேலும் தெரிவிக்கையில், மருத்துவர்களுக்கு வழங்க வேண்டிய மேலதிக நேர கொடுப்பனவுகள் இதுவரை வழங்கப்படாத நிலை அதேநேரம் மருத்துவமனைகளில் முக்கியமான மருந்துகளுக்கான பற்றாக்குறை காணப்படுகின்றது. இதனால் மருத்துவத் துறை பாரிய சவாலை எதிர் நோக்கி வருவதாகவும் தெரிவித்தனர்.

எரிபொருள் பெற்றுக்கொடுப்பதற்காக எடுத்த முயற்சிகளின் போது பிராந்திய சுகாதார மருத்துவ அதிகாரி மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்ட இச் சம்பவத்தை வன்மையாக கண்டிப்பதுடன் இதற்கு சரியான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் தெரிவித்தனர். (4-6-315-316)

# முக்கொம்பனில் வாரத்தில் ஒருமுறை நடமாடும் மருத்துவ முகாம் நடத்துங்கள்

## கிராம மக்கள் கோரிக்கை

(அக்கராயன்)

கிளிநொச்சி முக்கொம்பன் கிராமத்தில் நடமாடும் மருத்துவ சேவையினை வழங்குமாறு அக்கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்த ஓராண்டுகளுக்கு மேலாக பேருந்து சேவைகள் ஒழுங்கின்மை, வீதி சீரின்மையால் முக்கொம்பன் கிராமத்தில் இருந்து அக்கராயன் பிரதேச மருத்துவமனைக்கு பொது மக்கள் செல்வதில் நெருக்கடி உள்ளது. இதேபோன்று பூநகரி பிரதேச மருத்துவமனைக்கும் மக்கள் செல்ல முடியாத நிலைமை காணப்படுகின்றது. இந்நிலையில் வாரத்தில் ஒரு நாள் முக்கொம்பன் கிராமத்தில் நடமாடும் மருத்துவ சேவையினை வழங்குவதன் மூலம் முக்கொம்பனுக்கு அருகில் உள்ள கிராமங்களான கண்ணகைபுரம், நேரடம்பன், அரசபுரம் ஆகிய கிராமங்களின் மக்கள் நன்மை அடைவார்கள். (4-6-350)

# வெளிநாடு செல்வோரிடம் மோசடி

(கொழும்பு)

இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக பலர் வெளிநாடுகளில் வேலை வாய்ப்பை பெறுவதற்காக வரிசையில் காத்திருக்கின்றனர்.

குறித்த மக்களிடம், மருத்துவ சான்றிதழுக்கான கட்டணம் அதிகளவில் அறவிடப்படுவதாக குற்றச் சாட்டுக்கள் எழுந்துள்ளன.

18 ஆயிரம் முதல் 38 ஆயிரம் வரையில் இதற்கான கட்டணங்கள் அறவிடப்படுவதுடன், தரச் சேவைக் கட்டணங்களும் வெகுவாக உயர்ந்துள்ளன.

அதிகளவான கட்டண அறவீடு தொடர்பில் முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ள போதும், உரிய நடவடிக்கை எடுக்கப்பட வில்லை என உரிமம் பெற்ற வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் சங்கத்தின் செயலாளர் ... தெரிவித்தார். (4)



கொழும்புத்துறை மேற்கு சனசமூக நிலையமும் ஜெற்லைனேர்ஸ் விளையாட்டுக் கழகமும் இணைந்து நடாத்திய 51 ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு உள்ளூர் மரதன் ஓட்டப் போட்டி நிகழ்வு நேற்று முன்தினம் சனிக்கிழமை மேற்படி நிலையத் தலைவர் ப.சாந்தகுமார் தலைமையில் இடம்பெற்றது.

(படம்- ரவிசாந்)

# இரத்ததான முகாம்

(குப்பிழான்)

அமரர். நாகலிங்கம் தெய்வேந்திரத்தின் முதலாம் ஆண்டு நினைவை முன்னிட்டு விதையனைத்தும் விருட்சமே குழுமத்தின் ஏற்பாட்டில் மாபெரும் இரத்ததான முகாம் நிகழ்வு இன்று திங்கட்கிழமை காலை 8.30 மணி முதல் மாலை 3.30 மணிவரை தாவடி அம்பலவாணர் வேத விநாயகர் நூலக மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

மேற்படி இரத்ததான முகாம் நிகழ்வில் கலந்து கொள்ள விரும்புவர்கள் 0773241755 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறும், குருதிக் கொடையாளர்களுக்குப் போக்குவரத்து வசதி செய்து தரப்படும் எனவும் இரத்ததான முகாம் நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (4-6-18)



நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ இரண்டு நாள் விஜயமாக யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்துள்ள நிலையில், ஐக்கிய தேசியக் கட்சியின் யாழ்.மாவட்ட அமைப்பாளரும் முன்னாள் கல்வி இராஜாங்க அமைச்சருமான விஜயகலா மகேஸ்வரனை நேற்று முன்தினம் பலாலி வீதியில் அமைந்துள்ள உத்தியோகபூர்வ இல்லத்தில் சந்தித்து கலந்துரையாடியுள்ளார். (படம்-சிவசாந்தன்)

## அலங்கார உற்சவம்

(குப்பிழான்)

ஏழாலை இலந்தைகட்டி ஸ்ரீ பாதாள ஞானவைரவர் ஆலய அலங்கார உற்சவம் கடந்த 19 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு அலங்கார உற்சவத்துடன் ஆரம்பமானது.

தொடர்ந்தும் பத்துத் தினங்கள் இடம்பெறும் இவ் வாலய அலங்கார உற்சவத்தில் நாளை 28 ஆம் திகதி செவ்வாய்க்கிழமையுடன் இவ் வாலய உற்சவம் நிறைவு பெற உள்ளது. நாளைமறுதினம்29 ஆம் திகதி புதன்கிழமை பகல் மகேஸ்வர பூசை (அன்ன தானம்) இடம்பெறும் என ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர். (4-6-18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர்களிடையே போசாக்கு குறைபாடு

# இருபது வீதத்தால் அதிகரிப்பு

**(கொழும்பு)**

**சிறுவர்களிடையே போசாக்கு குறைபாடு 20 வீதவீத்தால் அதிகரித்துள்ளதாக கொழும்பு லேடி ரிட்ஜ்வே சிறுவர் மருத்துவமனையின் குழந்தை மருத்துவ நிபுணர் மருத்துவர் தீபால் பெரேரா தெரிவித்தார்.**



கொழும்பு லேடி ரிட்ஜ்வே சிறுவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்படும் குழந்தைகளில் 15 தொடக்கம் 20 வீதவீமானவர்கள் போசாக்கு குறைபாட்டினால் பாதிக்கப்பட்டுள்ளனர் என அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை , நாட்டின் பொருளாதார நிலைமை காரணமாக பிள்ளைகளின் போசாக்கு மட்டம் பாரியளவில் வீழ்வீச்சியடைந்து வருவதால், மதுபானம் மற்றும் சிகரெட்டுகளுக்கு செலவிடும் பணத்தை தமது பிள்ளைகளுக்கு முட்டை அல்லது ஏனைய சத்தான உணவை வழங்குவதற்கு அர்ப்பணிக்குமாறு பெற்றோர்கள் கேட்டுக் கொள்ளப்படுவதாக பெரேரா தெரிவித்தார்.

ஒரு சிகரெட்டுக்கு செலவிடும் பணத்தில் குழந்தைகளுக்கு இரண்டு முட்டைகளை வாங்க முடியும் என்றும் அவர் கூறினார். ஊட்டச்சத்து குறைபாடு காரணமாக குழந்தைகளின் போசாக்கு குறைபாடு அதிகரித்து வருவதாகவும், அவர்களின் ஊட்டச்சத்து குறித்து பெற்றோர்கள் மிகுந்த கவனம் செலுத்த வேண்டும் என்றும் தெரிவித்தார்

ஊட்டச்சத்து குறைபாடுள்ள குழந்தைகள் ஏனைய நோய்களுக்கு ஆளாகின்றனர் என்றும் அவர் தெரிவித்தார்.

மேலும் இந்த நேரத்தில் குழந்தைகளுக்கு தோட்டத்தில் விளையும் கீரைகளை அதிகளவில் கொடுப்பது மிகவும் அவசியம் என்றும் குறிப்பாக முருங்கை இலையை தினமும் உணவில் சேர்த்து வருவதன் மூலம் ஏராளமான சத்துக்களை பெற முடியும் என்றும் தெரிவித்தார்.

பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்து பெற்றோர்கள் தங்கள் வீட்டு முற்றத்தில் மரக்கறிகள் மற்றும் மூலிகைக்களை வளர்ப்பதில் அதிக ஆர்வம் காட்ட வேண்டுமென பெரேரா சுட்டிக்காட்டினார். (4)

## குற்றச்சாட்டை மறுக்கும் நாமல் ராஜபக்ஷ

(கொழும்பு)

எந்தவொரு அரச நிறுவனத்திற்கும் ஊழியர்களையோ அதிகாரிகளையோ நியமிக்கும் அதிகாரம் தனக்கு இல்லை என பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

முன்னிலை சோசலிசக் கட்சியின் செயலாளர் புபுது ஜயகொட வெளியிட்ட தகவல் தொடர்பாக கருத்து தெரிவிக்கும் போதே நாமல் ராஜபக்ஷ இதனைத் தெரிவித்துள்ளார்.

மேலும் தன்னால் அரச நிறுவனத்திற்கும் ஊழியர்களை நியமிக்க முடியும் என முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டு முற்றிலும் பொய்யானது என அவர் தெரிவித்துள்ளார்.

அரச நிறுவனங்களுக்கான அதிகாரிகளை நியமிக்கும் செயற்பாடு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்ட குழுவினால் மேற்கொள்ளப்பட்டதாக அவர் கூறியுள்ளார்.

அத்தோடு தான் முன்னர் வகித்த அமைச்சுக்களுக்கான அதிகாரிகளையும் அந்தக் குழுவே நியமித்ததாகவும் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார். (4)

## மதுபானங்களின் தரத்தை ஆராய நடவடிக்கை

(கொழும்பு)

நாடு முழுவதும் விற்பனை செய்யப்படும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மதுபானங்களின் தரம் தொடர்பில் பரிசோதனைகளை மேற்கொள்ள மதுவரித் திணைக்களம் நடவடிக்கை எடுக்கவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மதுபானங்களின் தரத்தை உரிய வகையில் பேணுமாறு கோபா குழு வழங்கிய அறிவுறுத்தலுக்கு அமைய இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படுகிறது.

நாடு முழுவதும் முதல் தடவையாக இவ்வாறு பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

இதன்படி, நாடளாவிய ரீதியாக உள்ள மதுபானசாலைகள், தொழிற்சாலைகள் மற்றும் விநியோக நிலையங்களில் மதுபானங்களின் மாதிரிகள் பெறப்பட்டு பரிசோதனைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

உரிய தரத்தை மீறும் மதுபானசாலைகள் மற்றும் தொழிற்சாலைகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என மதுவரி ஆணையாளர் கபில குமாரசிங்க தெரிவித்தார். (4)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 250 | 250 | 220 | 350 |
| உருளைக்கிழங்கு | 230 | 270 | 270 | 280 |
| பச்சைமிளகாய் | 400 | 450 | 550 | 500 |
| தக்காளி | 600 | 500 | 550 | 650 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 220 | 200 | 160 |
| கோவா | 340 | 300 | 300 | 350 |
| கரட் | 200 | 350 | 350 | 400 |
| பூசணி | 140 | 160 | 180 | 200 |
| புடோல் | 250 | 200 | 160 | 300 |
| வாழைக்காய் | 80 | 90 | 60 | 80 |
| சின்ன வெங்காயம் | 380 | 400 | 300-400 | 600 |
| பெரிய வெங்காயம் | 200 | 200 | 200 | 240 |
| பாகற்காய் | 600 | 350 | 400 | 600 |
| வெண்டைக்காய் | 180 | 150 | 160 | 300 |
| கருணைக் கிழங்கு | 140 | 250 | 230 | 240 |
| பயற்றங்காய் | 200 | 300 | 240 | 250 |
| லீக்ஸ் | 250 | 220 | 270 | 300 |
| பீற்றூட் | 360 | 250 | 240 | 400 |
| கறிமிளகாய் | 400 | 480 | 450 | 600 |
| முருங்கைக்காய் | 500 | 500 | 500 | 600 |
| போஞ்சி | 600 | 550 | 700 | 800 |
| கத்தரிதம்புள்ள | 200 | 200 | — | 320 |
| கீரை - 1 பிடி | 60 | 50 | 80 | 80 |
| தேசிக்காய் | 500 | 350 | 400 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 40-80 | 50-70 |
| இராசவள்ளி | 160 | 300 | 200 | 200 |
| வெங்காயப்பூ | 400 | 400 | 450 | 500 |
| முள்ளங்கி | 150 | 140 | 150 | 200 |
| பொன்னாங்காணி | 60 | 100 | 80 | 60 |
| வல்லாரை | 20 | 20 | 40 | 50 |
| ஈரப்பலா | — | 150 | — | 150 |

## பல நாட்கள் வரிசையில் நின்ற

## பொதுமக்களுக்கு உணவளித்த எரிபொருள் நிலைய உரிமையாளர்

(கொழும்பு)

இங்கிரிய பிரதேசத்தில் எரிபொருள் வரிசையில் காத்திருந்த மக்களை எரிபொருள் நிலைய உரிமையாளர் நெகிழ வைத்த சம்பவம் ஒன்று இடம் பெற்றுள்ளது.

பல நாட்களாக எரிபொருளுக்காக காத்திருந்த ஆயிரக்கணக்கான மக்களுக்கு இரவு பகலாக உணவு வழங்குவதற்கு எரிபொருள் நிலைய உரிமையாளர் நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.



இங்கிரிய உறுகல எரிபொருள் நிரப்பு நிலையத்தின் உரிமையாளர் கெலும் பிரசன்ன மற்றும் அவரது குழுவினர் அனைவரும் ஆற்றிய பணியை பொது மக்கள் பாராட்டி சமூக வலைத்தளங்களில் பதிவிட்டுள்ளனர்.

சில எரிபொருள் நிலையங்களுக்கு அருகில் ஏராளமான மக்கள் உணவு இல்லாமல் பல நாட்கள் காத்திருக்கின்ற நிலையில் இந்த நபர் மிகப்பெரிய சேவையை செய்துள்ளார் என பொது மக்கள் பாராட்டுகின்றனர். (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

நேற்றைய தொடர்ச்சி)


ஏழையிடம் அவன் தான் யாரென்பதை கூறி நாலாவது மகனுக்கு கல்வி கற்பிக்கத் தானே ஏற்பாடு செய்வதாகச் சொல்லித் தன்னோடு அழைத்துச் சென்றான். ஏழைக்கு நிறைய பொருளுதவி செய்தான்.

வேதாளம் இக்கதையைக் கூறி "சட்டப்படி தண்டனை என்பது சமூகத்தில் ஏற்படும் மாறுதல்களுக்கு ஏற்ப மாறுகிறது. இது ஆள்பவர்கள் தமது சாதக பாதகங்களைக் கருத்தில் கொண்டு எழுதப்படுவது.

அதனால் ஒரு காலத்தில் ஒரு நீதிபதி அளித்த தீர்ப்பு வேறொரு காலத்தில் சரியானதாக இல்லாமல் போகலாம்.

## அம்புலிமாமா

## தண்டனை சரியா?



இதனால் இந்துவர்மனிடமிருந்த படிக மணியின் அறிவிப்புகள் சரியானவை அல்ல என்று தானே கருத வேண்டும்? இந்த என் சந்தேகத்திற்கு நீ சரியான விடை தெரிந்தும் கூறா விட்டால் உன் தலை வெடித்துச் சுக்கு நூறாகி விடும்" என்றது.

விக்கிரமனும் "காலத்திற்கேற்ப சட்டங்கள் மாறுகின்றன தான். ஆனால் இந்துவர்மன் தன் காலத்தில் அமுலிலுள்ள சட்டங்களின்படி குற்றங்களுக்கு ஏற்றபடி தண்டனை விதிக்கப்படுகிறதா என அறியத்தான் முயன்றான். படிக மணிக்குச் சுயமாகத் தீர்ப்பளிக்கும் சக்தி கிடையாது.

அப்போதைய சட்டப்படி தண்டனை "சரியா இல்லையா என்பதைத்தான் அது தெரிவிக்கும். நீதிபதிகள் சில சமயங்களில் உணர்ச்சி வசப்பட்டு கடுந் தண்டனையையோ குறைவான தண்டனையோ அளித்தும் விடக் கூடும். எனவே படிகமணியின் அறிவிப்புகள் சரியானவை என்பது தெளிவாகிறது.

இந்து வர்மன் அதன் உதவியால் குறைவான தண்டனை தான் அளித்தான். அவன் தண்டனை அளிக்காமல் இருந்து விடவில்லை" என்றான்.

விக்கிரமனின் சரியான இந்த பதிலால் அவனது மௌனம் கலையவே அவன் சுமந்து வந்து உடலோடு வேதாளம் உயரக் கிளம்பிப் போய் மீண்டும் முருங்க மரத்தில் ஏறிக் கொண்டது

(முற்றும்)

# கம்பராமாயணம்

## யுத்த காண்டம்



142

அந்நேரத்தில் கும்பகர்ணன் போரில் மடிந்த செய்தி இராவணனுக்கு எட்டியது; ஆறாத் துயரத்தில் ஆழ்ந்தான்; 'தம்பியை இழந்தது ஈடு செய்ய முடியாத இழப்பு' என்பதை உணர்ந்தான்; போர்க்களத்தை நோக்கி அவன் சிந்தனை சுழன்றது.

அங்கிருந்த திரிசடை சீதைக்கு ஆறுதல் கூறினாள்; வந்தவன் சனகன் அல்லன் நடிப்பு, என்று கூறி அவளைத் தெளிவுபடுத்தினாள்; 'அலைகள் ஓய்வதில்லை' என்பதை அறிந்து அவள் தெளிவு பெற்றாள்.

### இந்திரசித்துடன் போர்

தம்பியைக் களப் பலியாக்கிய பின் 'அடுத்த தளபதி யார்?' என்று நாடினான். இராவணன் இளைய மகன் துடிப்பு மிக்கவன், துயர் அறியாதவன்; கொட்டிலில் கட்டி வைத்த இளங் கன்று; துள்ளிக் குதித்தது. ஆம் அவன்தான் அதிகாயன்! அவ[illegible] அவன் அனுப்ப[illegible]டான், இராமனுக்கு இளையவனைச் சந்தித்தான். அவனோடு தன் வீரத்தைக் காட்டி விளையாடினான் படுகளத்தில் உயிர் விட்டான்.

செய்தி அறிந்து இராவணன் செயலற்றான் அரக்கியர் இராவ[illegible] இறந்ததை[illegible] அழுகையால் அதனை அம்பலப்படுத்தினர்; மூத்தவன் இருக்க இளையவன் மடிந்தது ஏன்? முறைமாறி நடந்து கொண்ட தந்தையிடம் சொல்மாரி பெய்து, "என்னை அனுப்பி வைக்காமல் தம்பியை அனுப்பி வைத்தது முறையா?" என்று கேட்டான் இந்திரசித்து.

"தம்பியைக் கொன்ற கொடியவன் யார்?" என்று கேட்டு அறிந்தான்; இலக்குவனைத் தன் இலக்காகக் கொண்டு போர் தொடுத்தான் இளஞ் சிங்கங்கள் களத்தில் முழக்கம் செய்தன; இடிகள் மாறிமாறி இடித்தன; மழை பெய்யவில்லை; நேருக்கு நேர் சந்தித்தால் வேருடன் தான் அழிய வேண்டும் என்பதை இந்திரசித்து உணர்ந்தான்; வீரம் வளைந்து கொடுத்தது; சூழ்ச்சி முன் நின்றது; விண்ணில் பறந்து, கண்ணுக்குத் தெரியாமல் மறைந்தான்; "அவன் போர்க்களத்தை விட்டுப் புறமுதுகு இட்டான்" என்று இலக்குவன் தவறாய்க் கருதினான்; இந்திரசித்தின் திட்டம் அறியாது வாளா இருந்து விட்டான்.

இராவணன் இட்ட ஆணையின்படி இலக்குவனையும் அனுமனையும் நாகபாசம் கொண்டு பிணிக்கத் திட்டமிட்டான்; அவர்கள் சோர்வாய் இருந்த நேரத்தில் அரவக்கயிறுகள் கொண்டு இருவரையும் பிணித்து வைத்தான்; கட்டுண்டவர்கள் தப்ப வழி தெரியாமல் தடுமாறினர்; கயிறுகள் இறுக்கின; கழுத்தைச் சுருக்கின.

இலக்குவன் திக்குமுக்கு ஆடினான்; திசை தெரியாமல் திகைத்தான் செயலற்றுத் தளர்ச்சி அடைந்தான்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துய்மையான மனச்சாட்சி இடி முழக்கத்திலும் அச்சமின்றித் துயிலும்!

*– தாமஸ் முல்லர்*

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## வடபுலத்து நீதிபதிகளுக்கு எழுதுகின்ற அவசர மடல்

நாடு மிக மோசமான பொருளாதார நெருக்கடியைச் சந்தித்திருக்கக்கூடிய இந்த நேரத்தில், பொதுமக்கள் நம்பிக்கை வைத்திருக்கக்கூடிய எங்கள் வடபுலத்தின் மேன்மைக்குரிய நீதிபதிகளுக்கு இந்த அவசர கடிதத்தை பொதுமக்கள் சார்பில் எழுதுகின்றோம்.

இரண்டு விடயத்தை முன்வைத்து இக்கடிதம் எழுதப்படுகின்றது.

அதில் ஒன்று பொருளாதார நெருக்கடி சூழ்ந்த இந்நேரத்தில் எங்கள் வடபுலத்தில் சட்டம் ஒழுங்கை முழுமையாகப் பாதுகாப்பதில் பொலிஸாரின் வகிபங்கு மிகவும் முக்கியமானது.

எனினும் பொலிஸாரின் அண்மைக்காலப் போக்குகளை அவதானிக்கும்போது, வேலியே பயிரை மேய்ந்து விடுமோ என்ற அச்சம் ஏற்படவே செய்கிறது.

ஆம், எங்கெல்லாம் பொலிஸாரின் பணி தேவைப்படுகிறதோ அங்கெல்லாம் பொலிஸாரின் பிரசன்னம் அவசியமானதென்பதுடன் குறித்த இடத்தில் பொலிஸாரின் நேர்மையான கடமையும் அவசியமாகின்றது.

எனினும் அவ்வாறான கடமையை பொலிஸார் செய்யாததன் காரணமாக பொதுமக்கள் தமக்குள் முரண்பட்டுக் கொள்கின்ற சூழ்நிலை ஏற்படுகின்றது.

உதாரணத்துக்கு எரிபொருள் நிலையங்களில் ஏற்படக்கூடிய முரண்பாடுகள், அடிபாடுகள் மிக மோசமான விளைவுகளை ஏற்படுத்தி விடலாம்.

எனவே குறித்த இடங்களில் பொலிஸாரின் கடமை நேர்மையுடனும் அர்ப்பணிப்புடனும் இருக்க வேண்டும் என்பதை பொலிஸ் உயர் அதிகாரிகளுக்கு எங்கள் நீதிபதிகள் கட்டளையிடுவார்களாயின் அது நிச்சயம் நடைமுறைக்கு வரும் என்பதுடன் அந்த அமுலாக்கம் அமைதியான சூழமைவை ஏற்படுத்தும் என்பதும் உறுதி.

பொருளாதார நெருக்கடி மிகுந்த இந்த வேளையில், அரச நிர்வாகம் வலிமை இழந்திருப்பதால், எமது மக்களைக் காப்பாற்றக்கூடிய ஒரே சக்தி நீதிபரிபாலனமாக மட்டுமே இருக்க முடியும் என்பதால், மேற்போந்த கோரிக்கையை எங்கள் நீதிபதிகளிடம் முன்வைக்கின்றோம்.

மேலும் நாம் முன்வைக்கக்கூடிய இரண்டாவது விடயம் நீதிமன்றங்களில் சான்றுப் பொருளாக இருக்கக்கூடிய வாகனங்கள் மற்றும் துவிச்சக்கரவண்டிகள் பற்றியதாகும்.

வடபுலத்தில் உள்ள நீதிமன்றங்களில் சான்றுப் பொருளாக இருக்கக்கூடிய வாகனங்கள் மற்றும் துவிச்சக்கரவண்டிகளின் பெறுமதி கணிக்கப்படுமாயின், அதன் பெறுமதி மக்களின் பொருளாதார நெருக்கடியில் கணிசமான அளவை நிவர்த்திக்கக்கூடியதாக இருக்கும்.

உண்மை, தற்போது ஒரு துவிச்சக்கர வண்டியின் விலை 60 ஆயிரம் ரூபாயைக் கடந்துள்ளது.

இன்னும் சில வாரங்களில் இந்த விலை ஒரு இலட்சம் ரூபாய் என்றால்கூட ஆச்சரியப்படுவதற்கில்லை. இதுபோலதான் வாகனங்களின் விலைகளும்.

இந்நிலையில் நீதிமன்றங்களில் சான்றுப் பொருளாக இருக்கக்கூடிய ஏகப்பட்ட துவிச்சக்கரவண்டிகள் மற்றும் மோட்டார் சைக்கிள் உள்ளிட்ட வாகனங்கள் சட்டத்தின் துணை கொண்டு நம் பொதுமக்களை வந்தடையுமாக இருந்தால், அது இன்றைய பொருளாதார சூழ்நிலையில் வாழ்வாதாரத்தை இழந்து நிற்கக்கூடிய ஏழை மக்களுக்கு மிகப்பெரிய உதவியாக அமையும்.

ஆகவே இதுவிடயத்திலும் எங்கள் மேன்மைக்குரிய நீதிபதிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே நம் தாழ்மையான விண்ணப்பம்.

## வரிசையில் நிற்கும் மக்களுக்கு இன்று முதல் டோக்கன் வழங்கப்படும்

### எரிசக்தி அமைச்சர்

எரிபொருள் நிரப்பு நிலையங்களில் வரிசையில் நிற்கும் பொதுமக்களுக்கு இன்று முதல் டோக்கன் வழங்கப்படும் என எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

இராணுவத்தின் உதவியுடன் எரிபொருளை பெற்றுக்கொள்வதற்கான டோக்கன் இன்று முதல் வழங்கப்படும் என அவர் மேலும் கூறினார்.

இதன்போது கைத்தொலைபேசி எண்கள் பதிவு செய்யப்படும் என்றும் அமைச்சர் காஞ்சன விஜேசேகர குறிப்பிட்டுள்ளார்.

எரிபொருள் கிடைத்தவுடன், அவர்களுக்கு அழைப்பு விடுக்கப்படும் என்றும் அதன்பின்னர் அவர்கள் எரிபொருளை பெற்றுக்கொள்ள முடியும் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார். (4,7)

## பதுக்கி வைக்கப்பட்டிருந்த 1,000 லீற்றர் டீசல் மீட்பு

கொட்டகலை, கொமர்ஷல் பகுதியிலுள்ள மொத்த வியாபார நிலையமொன்றில் பதுக்கி வைக்கப்பட்டதாகக் கூறப்படும் ஆயிரம் லீற்றர் டீசல் கைப்பற்றப்பட்டுள்ளது.

ஐந்து பரல்களில் சேமித்து வைக்கப்பட்டிருந்த டீசலே திம்புள்ள - பத்தனை பொலிஸாரால் நேற்று பிற்பகல் இவ்வாறு மீட்கப்பட்டுள்ளது.

குறித்த வர்த்தக நிலையத்தில் எரிபொருள் பதுக்கி வைக்கப்பட்டிருப்பதாக திம்புள்ள - பத்தன பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலொன்றின் அடிப்படையில், குறித்த சுற்றிவளைப்பு தேடுதல் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது ஆயிரம் லீற்றர் டீசல் மீட்கப்பட்டுள்ளதோடு, ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். சட்ட நடவடிக்கைக்காக அவர் இன்று ஹட்டன் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளார். (4,7)

## அரச ஊழியர்கள் தொடர்பில் வெளியானது புதிய சுற்றறிக்கை

மறு அறிவித்தல் வரை குறைந்தளவிலான பணிக்குழாமினரை அன்றாட சேவைக்கு அழைக்குமாறு அரச நிறுவன பணிக்குழாமினர்களை அறிவுறுத்தி சுற்றுநிருபம் வெளியிடப்பட்டுள்ளது.

இதற்கான சுற்றுநிருபம் ஒன்று நேற்று வெளியிடப்பட்டது.

இதன்படி, நிறுவனங்களின் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு தேவையான குறைந்தபட்ச ஊழியர்களை மாத்திரம் சேவைக்கு அழைக்குமாறு நிறுவனங்களின் தலைவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அத்துடன், இயன்ற வரையில் சேவையாளர்களை வீட்டில் இருந்தவாறே பணியாற்ற அனுமதிக்குமாறும் குறித்த சுற்றுநிருபம் மூலம் நிறுவனங்களின் தலைவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (4,7)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 28 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணியிலிருந்து பிற்பகல் 5.30 மணிவரை

**மன்னார் பிரதேசத்தில்** மாந்தைச் சந்தி (திருக்கேதீஸ்வரம் கிராமம்), நாகத்தாழ்வு, திருக்கேதீஸ்வரம், திருக்கேதீஸ்வரம் மருத்துவமனை ஆகிய இடங்களிலும் **வவுனியா பிரதேசத்தில்** ஜீவன் அரிசி ஆலை, கஜன் அரிசி ஆலை- காத்தான் கோட்டம், மறக் கறம்பளை- கணேசபுரம் ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

## 70 சதவீத எரிபொருள் நிரப்பு நிலையங்களை மூட நடவடிக்கை

(கொழும்பு)

நாட்டில் நிலவும் எரிபொருள் நெருக்கடியைக் கருத்திற் கொண்டு 70 சதவீதமான எரிபொருள் நிரப்பு நிலையங்களை தற்காலிகமாக மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் டபிள்யு.எஸ்.பெர்னாண்டோ இதனைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

30 நாட்களுக்கு முன்னர் முற்பதிவு செய்யப்பட்டுள்ள போதிலும், இதுவரையிலும் போதுமானளவு எரிபொருள் கிடைக்கப் பெறவில்லை. இதனால் எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு எரிபொருள் கிடைக்கப் பெறாமையின் காரணமாக நாம் பெரும் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளோம்.

எரிபொருள் நிரப்பு நிலையங்களில் பாதுகாப்பிற்கா பொலிஸாரை மாத்திரம் கடமைகளில் ஈடுபடுத்துவது போதுமானதல்ல. எனவே இராணுவத்தினரையும் பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கோருகின்றோம் என தெரிவித்தார். (4,7)

## வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

### குடும்ப அமைதியே ஞானத்திற்கு வழி



நாம் ஆன்மிக வாழ்வு நடத்த முயல்கிறோம். மற்றவர்கள் அவரவர் வழியில் நடப்பார்கள். நம் குடும்பத்திலேயே கூட அத்தகையவர்கள் இருப்பார்கள். மற்றவர்களின் வழியால் நம் ஆன்மிக வாழ்வு பாதிக்கப்படக்கூடாது. அவ்விதமாக எல்லோருக்கும் ஒத்ததாக நம் வாழ்வு முறையை அமைத்துக் கொள்ள வேண்டும். அதே சமயத்தில் நம் வாழ்வு ஆன்மிக வாழ்வாக இருக்க வேண்டும்.

மனவளக்கலையை நான் வகுத்த போது,குடும்பத்திலிருந்து அமைதி தொடங்கி,சமுதாய விரிவாக அது அமைய வேண்டும் என்ற நோக்கத்தோடு திட்டமிட்டுத்தான் அதனை வகுத்தேன்.

உலக சமாதானம் வேண்டுமானால் முதலில் அதற்கு மனித சமுதாயத்தில் அமைதி வந்தாக வேண்டும். தன்னிலை விளக்கத்தின் மூலம் தான் அந்த அமைதி வரமுடியும்.தன்னிலை விளக்கத்தை நீங்கள் பெற்றுள்ளீர்கள். அதனைப் பெற்றுவிட்டால் மட்டுமே அமைதி வந்து விடாது. தன்னிலை விளக்கம் என்ற விளக்கின் வெளிச்சத்தில் உங்கள் வாழ்வு முறையைச் சோதித்துக் கொள்ள வேண்டும். அவ்வெளிச்சத்தில் உங்கள் வாழ்க்கையைத் திட்டமிட்டு நடத்த வேண்டும்.

உங்கள் குடும்பத்தில் அமைதி இருக்கிறதா? பிணக்கிருக்கிறதா? என்று ஆராயுங்கள். எல்லோரது வாழ்க்கையிலும் பிணக்குத்தான் மலிந்திருக்கிறது. பிணக்கானது சிலர் வாழ்க்கையில் சிறிதாயிருக்கலாம். வேறு சிலரது வாழ்க்கையில் பெரிதாயிருக்கலாம். ஆகவே, பிணக்கில்லாத வாழ்க்கையை எவன் அமைத்து அதன்படி வாழ்கிறானோ அவன் தான் ஞானி. ஒருவர் பெற்ற ஞானத்தைப் பரிசோதிக்கக் கருவி ஒன்று இருக்குமானால் அது அவரது குடும்ப அமைதி தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# போர்களின் பூமி உக்ரைன் அதன் வரலாற்றுப் பார்வை

கலாநிதி க.தவலிங்கம் (ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்) 17

மொத்தத்தில், உக்ரைனில் நடந்த படுகொலையின் (holocaust) போது சுமார் ஒரு மில்லியன் யூதர்கள், நாஜிக்கள் மற்றும் அவர்களது ஒத்துழைப்பாளர்களால் கொல்லப்பட்டதாக வரலாற்றாசிரியர்கள் மதிப்பிடுகின்றனர்.

1925 ஆம் ஆண்டில் ஒரு அதிகாரப் போராட்டத்தைத் தொடர்ந்து மேற்கு உக்ரைனிய மக்கள் குடியரசின் நாடு கடத்தப்பட்ட ஜனாதிபதி யெவன் பெட்ருஷெவிச்சின் அனைத்து ஆதரவாளர்களும் வெளியேற்றப்பட்டனர்.



உக்ரைன் ஆக்கிரமிப்பு மற்றும் படுகொலை முழுவதிலும் உக்ரைனியர்களுக்கும் நாஜிக்களுக்கும் இடையே குறிப்பிடத்தக்க ஒத்துழைப்பு இருந்தது.

## உக்ரைனிய தேசியவாதிகளின் அமைப்பு (Organization of Ukrainian Nationalists-OUN)

1919 ஆம் ஆண்டில் போலந்து-உக்ரைனியப் போரின் முடிவில், இரண்டாம் போலந்து குடியரசு மேற்கு உக்ரைனிய தேசிய குடியரசால் உரிமை கோரப்பட்ட பெரும்பாலான பகுதிகளைக் கைப்பற்றியது (மீதமுள்ளவை சோவியத் ஒன்றியத்தால் உள்வாங்கப்பட்டன). இதன்பின் ஒரு வருடம் கழித்து, நாடுகடத்தப்பட்ட உக்ரைனிய அதிகாரிகள் உக்ரைனிய இராணுவ அமைப்பை (Ukrainian Military Organization-UVO) அமைத்தனர். இது போலந்திற்கு எதிரான ஆயுதப் போராட்டத்தைத் தொடரும் குறிக்கோள்களுடன் உக்ரைனிய வீரர்களைக் கொண்ட ஒரு நிலத்தடி (Underground) இராணுவ அமைப்பு ஆகும்.

அரசியல் நிலைமையை சீர்குலைத்தல் மற்றும் போலந்து எதிர்ப்பு எழுச்சிக்கு நிராயுதபாணியான வீரர்களை தயார்படுத்துதல் போன்றவை அவ் அமைப்பின் ஆரம்ப செயற்பாடுகளாக இருந்தன. UVO கண்டிப்பாக ஒரு இராணுவ கட்டளை கட்டமைப்பைக் கொண்ட ஒரு இராணுவ அமைப்பாக இருந்தது. முதலில் UVO மேற்கு உக்ரைனிய மக்கள் குடியரசின் நாடுகடத்தப்பட்ட அரசாங்கத்தின் அதிகாரத்தின் கீழ் இயங்கியது. ஆனால் மேற்கு உக்ரைனிய அர்சியல் கட்சிகள் இந்த அமைப்புக்கு இரகசியமாக நிதியளித்தன. இது நாச வேலை செயல்களில் ஈடுபட்டிருந்தாலும் அது ஒரு பயங்கரவாத அமைப்பாக இல்லாமல் ஒரு போர்க் குணமிக்க பாதுகாப்பு அமைப்பாகவே செயற்பட்டது.

1923 இல் நேச நாடுகள் மேற்கு உக்ரைன் மீது போலந்து ஆட்சியை அங்கீகரித்த போது, பல உறுப்பினர்கள் அமைப்பை விட்டு வெளியேறினர். சட்ட ரீதியான உக்ரைனிய கட்சிகள் UVOவின் போர்க் குணமிக்க நடவடிக்கைகளுக்கு எதிராகத் திரும்பின, மேலும் அவை போலந்து அரசியல் அமைப்பினுள் செயற்பட விரும்பின.

இதன் விளைவாக, UVO அரசியல் மற்றும் நிதி உதவிக்காக ஜேர்மனி மற்றும் லிதுவேனியாவுக்கு திரும்பியது. இது உக்ரைனிய தேசிய இளைஞர்களின் குழு, உக்ரைனிய தேசியவாதிகளின் லீக் மற்றும் உக்ரைனிய தேசியவாத இளைஞர்களின் ஒன்றியம் போன்ற போலாந்து (போலிஷ்) எதிர்ப்பு மாணவர் அமைப்புகளுடன் தொடர்பை ஏற்படுத்தியது.

1927 இல் பேர்லினிலும், 1928 இல் பிராகாவிலும் ஆரம்பக் கூட்டங்களுக்குப் பிறகு, 1929 இல் வியன்னாவில் நடந்த ஸ்தாபக மாநாட்டில், UVO வின் வீரர்களும் மாணவர் போராளிகளும் சந்தித்து ஒன்றுபட்டனர். அதாவது இம் மாநாடு உக்ரைனிய தேசியவாதிகளின் அமைப்பை (OUN) நிறுவ வழி வகுத்தது.

**உக்ரைனிய இராணுவ அமைப்பு (UVO) மற்றும் பல தேசியவாத மாணவர் சங்கங்கள், உக்ரைனிய தேசிய இளைஞர் குழு, உக்ரைனிய தேசியவாதிகளின் லீக் மற்றும் உக்ரைனிய தேசியவாத இளைஞர் ஒன்றியம் ஆகியவை இணைந்து உக்ரைனிய தேசியவாதிகளின் அமைப்பு (OUN) உருவானது.**

இம் மாநாட்டில் ஒன்பது பேர் கொண்ட உக்ரைனிய தேசியவாதிகளின் தலைமைத்துவத்தை யெவ்ஹெ்ன் கொனோவலெட்ஸ் தலைமையில் தேர்ந்தெடுத்தது. அவ் அமைப்பு ஒரு சட்டத்தையும் அதன் அடிப்படைக் கொள்கையையும் வகுத்தது. அதன் ஆரம்பப் பிரகடனத்தின்படி, உக்ரைனிய இனப் பிரதேசத்தில் ஒரு சுதந்திரமான, ஐக்கிய தேசிய அரசை நிறுவுவதே OUN இன் இலக்காக இருந்தது.

இது ஸ்தாபிக்கப்பட்ட நேரத்தில், OUN மீது மிதமான உக்ரைனிய தேசிய ஜனநாயக கூட்டணி (UNDO) ஆதிக்கம் செலுத்தியது. இந்த கட்சி அரசியலமைப்பு ஜனநாயகத்தை ஊக்குவித்ததுடன், அமைதியான வழிமுறைகளின் மூலம் சுதந்திரத்தை அடைய முயன்றது. UNDO ஐ உக்ரைனிய மதகுருமார்கள், புத்திஜீவிகள் மற்றும் பாரம்பரிய ஸ்தாபனங்கள் ஆதரித்தன.

இதற்கு நேர்மாறாக, OUN வன்முறையை வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு எதிரிகளுக்கு எதிரான ஒரு அரசியல் கருவியாக ஏற்றுக் கொண்டது. அதன் பெரும்பாலான நடவடிக்கைகள் போலந்து அரசியல்வாதிகள் மற்றும் அரசாங்க பிரதிநிதிகளுக்கு எதிராக இயக்கப்பட்டன.

OUN தன்னை ஒரு கட்சி அல்லாத ஒரு இயக்கம் என்று வரையறுத்துக்கொண்டது. அது கலீசியாவில் இருந்த சட்டபூர்வமான உக்ரைனியக் கட்சிகளை ஆட்சியின் ஒத்துழைப்பாளர்கள் என்று கண்டனம் செய்தது. உக்ரைனிய சுதந்திரப் போராட்டத்தின் 1917-1920 தோல்விக்கு சோசலிச மற்றும் தாராளவாத கூட்டுக்களைக் குற்றம் சாட்டியது. வலுவான அரசியல் உயரடுக்கு (மேல்மட்டம்), தேசிய ஒற்றுமை மற்றும் "நம் சொந்தப் படைகளை" நம்பியிருப்பதன் முக்கியத்துவத்தை OUN வலியுறுத்தியது.

OUN இன் குறிக்கோளானது புரட்சிகர வழிமுறைகள் மூலம் உக்ரைனிய இனப் பிரதேசங்களில் ஒரு சுதந்திர தேசிய உக்ரைனிய அரசை நிறுவுவதாகும். உக்ரைனிய பிரதேசங்களை ஆக்கிரமித்துள்ள ஆட்சிகளுடன் எந்தவிதமான ஒத்துழைப்பும் வழங்குவது தவிர்க்கப்பட்டது. அனைத்து எதிரிகளுக்கும் (குறிப்பாக போலந்து, செக்கோஸ்லோவாக்கியா, ருமேனியா இராச்சியம் மற்றும் சோவியத் யூனியனுக்கு) எதிரான அரசியல் கருவியாக வன்முறை ஏற்றுக்கொள்ளப்பட்டது.

பெப்ரவரி 1929 இல் நிறுவப்பட்ட மேற்கு உக்ரைனிய பிராந்திய நிர்வாகியின் கட்டளையின் (command of the Western Ukrainian Territorial Executive) கீழ் இவ் அமைப்பு (OUN) கலீசியா மற்றும் வோல்ஹினியாவில் நூற்றுக்கணக்கான நாசவேலைச் செயல்களைச் செய்தது. இதில் போலந்து நில உரிமையாளர்களுக்கு எதிரான பிரச்சாரம், அரசுப் பள்ளிகளைப் புறக்கணித்தல் மற்றும் போலந்து புகையிலை மற்றும் மது ஏகபோகங்கள், அதன் நடவடிக்கைகளுக்கான நிதியைப் பெறுவதற்காக அரசாங்க நிறுவனங்கள் மீது டசின் கணக்கான பறிமுதல் தாக்குதல்கள் மற்றும் படுகொலைகள் என்பவை அடங்கும்.

**1930 களில் OUN இன் செயற்பாடு, முக்கியமாக கலீசியா மற்றும் வோலினில், போலந்து ஆட்சிக்கு எதிராக குவிந்தது. OUN போலந்து நில உரிமையாளர்களுக்கு எதிராக நாச வேலையை நடத்தியது. அத்துடன் அரசு பள்ளிகளை புறக்கணித்தது. மேலும் அரசாங்க நிறுவனங்களைத் தாக்கிய தோடு பல படுகொலைகளையும் நடத்தியது.**

போலந்து ஆட்சியானது இந்த தாக்குதல்களுக்கு 1930 ஆம் ஆண்டு தொடங்கிய சமாதான பிரச்சாரத்துடன் பதிலளித்தது.

1930கள் முழுவதும் OUN இன் பல உறுப்பினர்கள் சிறையில் அடைக்கப்பட்டனர். மேலும் 1934 ஆம் ஆண்டில் மேற்கு உக்ரைனிய பிராந்திய நிர்வாகி ஸ்டீபன் பண்டேரா உட்பட OUN இன் தலைவர்கள் பலர் கைது செய்யப்பட்டனர்.

இரண்டாம் உலகப் போர் வெடிக்கும் வரை சிறையில் அடைக்கப்பட்டனர்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மீண்டும் எகிறி...

பொருள் விலையை அதிகரித்துள்ளது.

இதன்படி 92 ஒக்டேன் பெற்றோல் லீற்றர் ஒன்றின் விலை 50 ரூபாயினால் அதிகரிக்கப்பட்டு புதிய விலை 470 ரூபாயாக உயர்ந்துள்ளது.

அத்துடன், 95 ஒக்டேன் பெற்றோல் விலை 100 ரூபாயினால் அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில் லீற்றர் ஒன்றின் புதிய விலை 550 ரூபாயாக அதிகரித்துள்ளது.

ஓட்டோ டீசல் 60 ரூபாயினால் அதிகரிக்கப்பட்டு புதிய விலை 460 ரூபாயாகும், சுப்பர்டீசல் 75 ரூபாயினால் உயர்ந்து 520 ரூபாயாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அறிவித்துள்ள விலை அதிகரிப்புக்கு நிகராக ஐ.ஓ.சி நிறுவனமும் எரிபொருளின் விலையை அதிகரித்துள்ளது. (4-7)

## மாதாந்தம்...

நாட்டை மீட்டெடுக்க தேசிய அரசாங்கம் ஊடாக பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டால் நாட்டுக்குத் தேவையான பணம் வழங்கப்படும் என சுவிட்சர்லாந்தின் லூசர்ன் பல்கலைக்கழக ஆய்வாளர் கலாநிதி நிலங்க சமரசிங்க தெரிவித்துள்ளார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியில் இருந்து எப்படி மீள்வது? சமூக மற்றும் அரசியல் பிரச்சினைகளில் இருந்து மீள்வது எப்படி? புதிய தேசியமாக நாடு எப்படி மீண்டு வரும் என்பது தொடர்பில் அரசாங்கம் மற்றும் எதிர்க்கட்சி இணைந்து எங்களுக்கு ஒரு வரைபடத்தை காண்பித்தால் இலங்கைக்கு உதவுவோம்.

எந்தெந்த அர்ப்பணிப்புக்களை செய்கின்றோம் என்பது தொடர்பிலும் அரசாங்கம் மற்றும் எதிர்க்கட்சியினர் இணைந்து அனைத்துக் கட்சி தேசிய பேரவையின் ஊடாக பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டால் ஒரு மாதத்திற்குள் இலங்கையை பொருளாதார நெருக்கடியில் இருந்து மீட்க நாங்கள் தயார் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (4-7)

## இரு அமைச்சர்...

சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று பிற்பகல் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

தற்போது 9,000 மெற்றிக் தொன் டீசலும் 6,000 மெற்றிக் தொன் பெற்றோலும் மாத்திரமே கையிருப்பில் உள்ளது.

இந்தநிலையில், இன்று லங்கா ஐ.ஓ.சி நிறுவனத்திடம் இருந்து 10,000 மெற்றிக் தொன் டீசலை பெற்றுக் கொள்வதற்கு எதிர்பார்த்துள்ளதாக வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

அதேநேரம், கடன் திட்டத்தின் அடிப்படையின் கீழ், எரிபொருள் இறக்குமதி செய்யும் நாடுகளின் நிறுவனங்களிடம் இருந்து இணக்கப்பாட்டின் அடிப்படையில் எரிபொருளை கொள்வனவு செய்வது தொடர்பான யோசனை ஒன்றை இன்று அமைச்சரவையில் முன்வைக்கவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். (4-7)

## மருந்துக்...

பட்டுள்ளது.

நேற்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் ஏற்பட்ட குறித்த தீ விபத்துக் காரணமாகப் பெருமளவான மருந்துப் பொருட்கள் அநியாயமாகத் தீக்கிரையாகியுள்ளன. தீ விபத்துக்கு மின்சாரக் கோளாறே காரணம் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, மேற்படி சம்பவம் தொடர்பில் தெல்லிப்பளைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (4-7,18,33)

## 3 மணிநேர...

யில் 3 மணி நேரம் மின்துண்டிப்பை அமுல்படுத்த இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ளது.

இதன்படி, ABCDEFGHIJKLPQRSTUVW போன்ற வலயங்களில் 3 மணி நேரம் மின்துண்டிப்பை அமுல்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

குறித்த வலயங்களில் பகல் வேளையில் ஒரு மணி 40 நிமிடங்களும் இரவு வேளையில் ஒரு மணி 20 நிமிடங்களும் மின் துண்டிப்பு மேற்கொள்ளப்படும்.

இதேவேளை கொழும்பில் எதிர்வரும் 2 மற்றும் 3ஆம் திகதிகளில் காலை 6 மணி முதல் 8 மணி வரையான காலப்பகுதியில் 2 மணித்தியாலயங்கள் மின் துண்டிக்கப்படும்.

குறித்த தினங்களில் MNOXYZ ஆகிய வலயங்களில் அதிகாலை 5 மணிமுதல் 8 மணிவரையான காலப் பகுதியில் 3 மணிநேரம் மின் துண்டிக்கப்படும். (4-7)

## பணிப் பகிஷ்கரி...

திருந்த நிலையில் குறித்த பணிப் பகிஷ்கரிப்பு போராட்டம் தற்காலிகமாக இடைநிறுத்தப்படுவதாக அறிவித்துள்ளனர்.

வடக்கு ஆளுநர், யாழ்.மாவட்டச் செயலர் ஆகியோர் வழங்கிய வாக்குறுதிக்கு அமைய குறித்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

பெற்றோல் வழங்கப்படாமை காரணமாகவே போராட்டம் முன்னெடுக்கப்படும் என்று முன்னதாக அவர்கள் அறிவித்திருந்தனர்.

இந்நிலையில் இன்று யாழ்ப்பாணத்திற்கும் எதிர்வரும் புதன்கிழமை வடக்கின் ஏனைய போக்குவரத்து சபை ஊழியர்களுக்கும் எரிபொருள் வழங்க ஆளுநர் உறுதியளித்துள்ளதாக தெரியவந்துள்ளது. (4-7)

## உணவு...

அனைத்து உணவுப் பொருட்களின் விலைகளும் 10 வீதத்தால் அதிகரிக்கப்படவுள்ளதாக அகில இலங்கை சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இதன்படி நேற்று முதல் சிறிய உணவுகள், கொத்து மற்றும் உணவுப் பொதிகளின் விலைகள் 10 வீதத்தால் அதிகரிக்கப்பட்டன.

நுகர்வோர் மற்றும் விற்பனையாளர்களுக்கு உணவுப் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் எரிபொருள்விலை அதிகரிக்கப்பட்ட சில மணி நேரங்களின் பின்னர் மீண்டும் இந்த விலையேற்றம் இடம்பெற்றுள்ளது. (4-7)

## ரயில்...

சரவையிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

நாளொன்றுக்கு ரயிலொன்று 100,000 லீற்றருக்கு மேல் எரிபொருளைப் பயன்படுத்துவதால் கட்டணத்தை அதிகரிப்பதைத் தவிர வேறு வழியில்லை என ரயில்வே திணைக்களப் பேச்சாளர் பிரதிப் போக்குவரத்து அத்தியட்சகர் காமினி செனவிரத்ன தெரிவித்தார்.

எவ்வாறாயினும், ரயில்வே திணைக்களத்திடம் போதியளவு எரிபொருள் கையிருப்பு உள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (4-7)

## விசேட பொதுக் கூட்டம்

வயாவிளான் தெற்கு ஞானவைரவர் ஆலய விசேட பொதுக் கூட்டம் 03.07.2022 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு கோவில் முன்றலில் நடைபெறவுள்ளது. அடியார்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

நிர்வாகத்தினர்
வயாவிளான் தெற்கு
ஞானவைரவர் ஆலயம்

(11993)

### தன நிதானய

திகதி - 2022.06.26
சீட்டிழுப்பு இலக்கம் - 828
ஆங்கில எழுத்து: H
வெற்றி இலக்கங்கள்: 13 42 57 80
தேசிய லொத்தர் சபை

### மஹஜன சம்பத

திகதி 2022/06/26
சீட்டிழுப்பு இலக்கம் 4798
ஆங்கில எழுத்து: B
வெல்லப்பட்ட இலக்கங்கள்: 8 5 8 9 7 3
தேசிய லொத்தர் சபை

### HANDAHANA

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2022.06.26
சீட்டிழுப்பு இலக்கம் 107
வெற்றி இலக்கினம்: துலாம்
வெற்றி இலக்கங்கள்: 01 19 24 29
துலாம்
தேசிய லொத்தர் சபை

### மெகா பவர்

திகதி 26/06/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1146
வெற்றி எழுத்து: A
சுப்பர் இலக்க: 23
வெற்றி இலக்கங்கள்: 31 51 66 79

### கொவிசெத

திகதி 2022.06.26
சீட்டிழுப்பு இலக்கம் 3040
ஆங்கில எழுத்து: L
வெற்றி இலக்கங்கள்: 15 37 51 79
தேசிய லொத்தர் சபை

### ஜாதிக சம்பத

சீட்டிழுப்பு திகதி 26/06/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1276
வெற்றி இலக்கங்கள்: சிம்மம் 3 5 8 8 5 8
தேசிய லொத்தர் சபை

### SUPER BALL

சீட்டிழுப்பு வாரம் 1773
நிறம் சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 2022.06.26
தினம் ஞாயிற்றுக்கிழமை
M 17 38 51 62
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 1,868,560/-
அபிவிருத்தி லொத்தர் சபை

### சசிரி

சீட்டிழுப்பு வாரம் 188
சீட்டிழுப்பு திகதி 2022.06.26
ஞாயிற்றுக்கிழமை
வெற்றி இலக்கங்கள்: 02 | 04 | 31
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 1,348,000/-
அபிவிருத்தி லொத்தர் சபை
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

### சனிதா

ஞாயிற்றுக்கிழமை
சீட்டிழுப்பு திகதி : 2022.06.26
சீட்டிழுப்பு இல : 3934
வர்ணம் : இளஞ்சிவப்பு
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 2,298,140/-
வெற்றி இலக்கங்கள்: 09 27 38 44
ஆங்கில எழுத்து: S
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

### ராசி

சுப்பர் ஜக்பொட் ரூ. 4,698,609.80
திகதி 2022-06-26
வெற்றி வாரம் 3485
வர்ணம் ஊதா
வெற்றி இலக்கங்கள்: 11 16 43 47
கன்னி
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 6,260,160/-

### 12 வர்ண

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
V 37 33 40 56 58
சுப்பர் இலக்கம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 244,795,807/-
சீட்டிழுப்பு வாரம் 949
வர்ணம் மஞ்சள்
திகதி 2022.06.26 ஞாயிற்றுக்கிழமை
தொலை பேசி : 011-2 333 546-47
Web : www.dlb.lk
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

### அத கோடிபதி (ADA KOTIPATHI)

ஞாயிற்றுக்கிழமை
சீட்டிழுப்பு இல :1599
வர்ணம் : பச்சை
சீட்டிழுப்பு திகதி : 2022.06.26
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 2,547,100/-
வெற்றி இலக்கங்கள்: 09 24 54 75
ஆங்கில எழுத்து: F
அபிவிருத்தி லொத்தர் சபை
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பத்திரிகை விநியோகம்

யாழ்ப்பாணப் பிரதேசத்தில் துவிச்சக்கர வண்டிகள் மூலம் பத்திரிகை விநியோகம் செய்வதற்கு ஆட்கள் தேவை.

(பகுதிநேர வேலை)

- யாழ்ப்பாணத்தை அண்மித்திருப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
- பொருத்தமானவர்கள் நேரில் வரவும்.

மேலதிக விபரங்களுக்கு
**076 097 3121**

இல.3, 2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். | பொது முகாமையாளர் வலம்புரி



வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (11963)

**076 825 7716** (ஆகாஸ்)



வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்

## றாஜ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.

தொடர்பு: **றாஜ் - 077 679 6623** (11991)



பயிற்சியுடன் உடனடி **வேலை வாய்ப்பு**

A/L எடுத்தவர்கள் மட்டும் - 6 மாத பயிற்சி

விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள் **V2 TRAVELS** (C-4121)

எமது கிளைகள்

- பயிற்சிக்கால ஊக்கத்தொகை -20,000/-
- பயிற்சியின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.
- பயிற்சியின் முடிவில் வேலைவாய்ப்பு வழங்கப்படும்.
- வேலையின்போது ஆரம்ப சம்பளம் -35,000/-

49A, சப்பல் லேன் யாழ்ப்பாணம். **0777-068-777**



## உடனடி வேலை வாய்ப்புக்கள்

**EXECUTIVE OFFICER**

- சம்பளம் - 25000/= தொடக்கம் 50000/= (நிபந்தனைகளுக்கு உட்பட்டது)
- வயது-22 தொடக்கம் 35
- தகுதி- பட்டதாரிகள் (ஆங்கில அறிவு அவசியமானது) (C-4121)

**V2 TRAVELS**

AIRTICKETING, VISA SERVICES, INTERNATIONAL COURIER போன்ற துறைகளில் பயிற்சி அளித்து உடனடி வேலைவாய்ப்புக்கள் வழங்கப்படும்

49A, சப்பல் லேன் யாழ்ப்பாணம் **0777-068-777**



## நீர்க்கசிவினை நிரந்தரமாக நிறுத்துவதற்கு

உங்கள் வீடுகள், கட்டடங்கள், கோவில்கள், கடைகள் (மொட்டை மாடிகள், தண்ணீர்த்தொட்டி, வில்லுமண்டபம், முகட்டுக்கூரைகள், வெளிப்புறச் சுவர்கள், மேல் மாடி குளியல் அறைகள், நீரோடிகள்), வெடிப்புகள், நீர்க்கசிவுகளை உத்தரவாதச் சான்றிதழுடன் நிவர்த்தி செய்து தருகிறோம்.

மேலும் மாபிள் பதிக்கப்பட்ட குளியல் அறைகளில் ஏற்படும் நீர்க்கசிவுகளை மாபிளை உடைத்து சேதப்படுத்தாமல் சிறந்த இரசாயனங்கள் மூலம் நீர்க்கசிவினை நிறுத்தித் தருகிறோம்.

**Skyline Water Proofing** 1 சதுர அடி ரூ.200/- முதல்

No.89, Old Park Road, Jaffna, Sri Lanka.
077 722 0095/076 663 6481/021 221 4994
கிளிநொச்சி/முல்லைத்தீவு - 077 741 4960
வவுனியா / மன்னார் - 077 279 0743 (11988)



## பகுதி நேர வேலை வாய்ப்பு
### யாழ்ப்பாணம் - நல்லூர்

நல்லூர் பகுதியில் அமைந்துள்ள தனியார் நிறுவனம் ஒன்றிற்கு பகுதி நேர வேலைக்கு பெண் வேலையாட்கள் தேவை.

- தகுதி : கல்விப் பொது தராதர உயர் தரப் பரீட்சையில் கணித அல்லது விஞ்ஞானப் பிரிவில் 3 பாடங்கள் சித்தியடைந்திருக்க வேண்டும்.
- வேலை நேரம் : ஒவ்வொரு சனிக்கிழமையும் முற்பகல் 6.00 தொடக்கம் பிற்பகல் 1.00 மணி வரை
- சம்பள அளவு : ரூபாய் 2,500/= (7 hours)
- ஆர்வமும் துடிப்பும் அக்கறையும் உள்ளவர்கள் மட்டும் விண்ணப்பிக்கவும். (11992)

சுயவிபரத்தினை 076 988 0102 இற்கு 30.06.2022 இற்கு முன்னர் Whatsapp இல் Pdf ஊடாக அனுப்பி வைக்கவும்.



10வருட வெற்றிகரமான சேவையில். SEP/2022

## UK அல்லது கனடாவில் உயர்கல்வி

குறைந்த கட்டணத்தில் இலகுவாக செல்லக்கூடிய நேர்வழி

எமது வீசா ஆலோசனை வாயிலாக UK, கனடா சென்ற மாணவர்களினை நேரில் வரும் சந்தர்ப்பத்தில் பார்வையிடமுடியும்

நேரில்வந்து சந்தித்து இலவச ஆலோசனைகளை அறிந்து கொண்டு பயன்பெற... (C-4543)

**WORLD EDUCATION CONSULTANCY**
0779265447 / 0217200989


# யானை தாக்கியதில் ஒருவர் பலி

நுவரெலியாவில் யானைத் தாக்குதலுக்குள்ளாகி நபரொருவர் நேற்று உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நுவரெலியா - ஹங்குராங்கெத்த பொலிஸ் பிரிவில் காட்டு யானை தாக்கியே ஆணொருவர் இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

வீதியில் மோட்டார் சைக்கிளில் செல்லும் போதே குறித்த நபர் யானை தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர். (4-7)

# மரண அறிவித்தல்

பிறப்பு 16 - 06 - 1947



இறப்பு 24 - 06 - 2022

## திருமதி
## வேலாயுதபிள்ளை கமலாம்பிகை

மஞ்சவனப்பதி வீதி, கொக்குவில் மேற்கு, கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வேலாயுதபிள்ளை கமலாம்பிகை அவர்கள் கடந்த 24.06.2022 (வெள்ளிக்கிழமை) அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலாயுதபிள்ளை அவர்களின் பாசமிகு மனைவியும் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - அன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - இலட்சுமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் கிருபாகரன், சிவாகரன், ஜெயாகரன், சசிகலா, கருணாகரன் ஆகியோரின் அன்புத் தாயாரும் நீத்தா, மஞ்சுளா, வாசுகி, ரங்கநாதன், இந்திரவதனி ஆகியோரின் பாசமிகு மாமியாரும் கிசோக், தக்ஷி, அஜய், மாதங்கி, யாதவன், தர்ணிகா, துளசிகன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (27.06.2022) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம். (11995)

வே. கருணாகரன் (மகன்) - 021 205 2005 | தகவல் - குடும்பத்தினர்


## வெளிநாடுகளுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவை

அசாதாரண சூழ்நிலையிலும் அனைத்து நாடுகளுக்கும் வழமைபோல் **100%** பாதுகாப்புடன் எமது சேவைகள் நடைபெறுகின்றது.

**அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்**
இல.01, பிறவுண் வீதி, நாவலர் வீதிச் சந்தி, யாழ்ப்பாணம்.
தொ.பே:- **021 222 6113**

**அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்**
இல.01, புதிய மாநகர சபை கட்டிடத் தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே:- **021 222 3536**

**அருள்**
இ.போ.ச டிப்போ எதிரில், பருத்தித்துறை. | இல.01, தபால் கந்தோர் வீதி, சாவகச்சேரி. | இல்.01, பெற்றோல் செற் எதிரில், நெல்லியடி.
தொ.பே:- **076 443 1576** (C-4547)


# கண்ணீர் அஞ்சலி

கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் ஆலய முன்னை நாள் தலைவர் **வே.கருணாகரன்** அவர்களினதும் ஆலய வளர்ச்சியில் பங்காற்றிக் கொண்டிருக்கும் **கிருபாகரன், ஜெயாகரன், சிவாகரன்** ஆகியோரினதும் பாசமிகு தாயார்

## திருமதி வேலாயுதபிள்ளை கமலாம்பிகை



அவர்கள் இறைபதம் எய்திய செய்தியறிந்து துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா மஞ்சவனப்பதி முருகனின் பாதங்களை சென்றடைய பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பிரிவால் துயருறும் : தர்மகர்த்தா சபை, கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் ஆலயம். (11996)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 27.06.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.